875

T.D.R.e. 58

R.R. No: 875. 1. 1915.

O-,1MCM2,M
N15

119102

73

பாதர் அநீதி.

OFFICE OF THE REGISTRAR OF
6 - MAR 1915

873
1·15

ராம்பூர் - பாரதப் பிரசங்கியார்

செல்லப்ப முதலியார்.

சச்சிதாநந்தம் பிரஸ்,

சென்னை.

விலை அணா இரண்டு.

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR
6 - MAR 1915
MADRAS.

மாதர் அநீதி.

8 15
1.15

இது

களம்பூர்-பாரதப்பிரசங்கஞ் செய்யும்

ஸ்ரீமான் - செல்லப்ப முதலியாரவர்களால்

இயற்றப்பெற்று

வித்வான் - ஸ்ரீமான் – ம. இராஜகோபால பிள்ளை

அவர்களால் பார்வையிடப்பெற்று

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

விலை] (காப்பிரைட்). [அணா 2.

முகவுரை.

அருந்தமிழுணர்ந்த பெருந்திருவாளர்காள்!

உலகியல் நிலைபெறுவது கற்போம்பும் பொற்பார்ந்த காந்தையாற்றா லென்பது,

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு-ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்குநிக ரன்றே"

என வரும் தேர்ந்த மொழியைக் கூர்ந்து நோக்கின் இனிது வெளியாம். இத்துணை மேன்மை வாய்ந்த சித்திர விழியார் பலர், தங்கட்குள்ள ஆற்றலை அறிந்தொழுகும் சிறந்த பாக்கியத்திற் பொருந்தி யிராது வழுவுகின்றனர்-பிறர் தூண்டி னல்லது தமது அபார சக்தியைத் தாமே அறியொணாதபடி ஞானாதிகரான ஆஞ்சநேயருக்குச் சாப மெய்தியது போல, இப் பொற்கொடியார்க்கும் தூண்டுதலின்றித் தாமே தமது பெருமையை யுணர்ந்தொழுகும் பேறு சிறவாதபடி, பேதைமைக் குணம் இயல்பா யமைந்ததுபோலும். இப்பேதைமை அடியாக வரும் பிறழ்வால் விளையக் கடவனவான அனர்த்தங்கட் களவேயின்றாம். இந்நூலின் முதற் பாடலிற் கண்ட இரேணுகா தேவி, சீதா தேவி, துரோபதா தேவி ஆகிய இவர்களென்ன சாமானியரா? தெய்வ வகுப்பின ரென்றன்றோ உலகமும் இதிகாசங்களும் கொண்டாடுகின்றன. இவர்களோ உலக தருமத்தை அநுஷ்டித்துக் காட்ட வந்தவர்கள். பிழைபிலான் கடவுளன்றி மக்களிற் றப்பில்லாதா ரொருவருமில ரென்பதை நிலை நிறுத்தி, நம்மை யாட்கொள்ளவே இவர்கள் சுஜாதிய வடிவினராய் வந்து, பேதைமைத் தன்மை தங்களையும் பிறழவைத்துக் கேட்டை விளைவித்ததென்று காட்டி, அப்பிறழ்வு நேராதபடி அது விஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும் என்பதை எச்சரித் திருக்கின்றனர்.

வேதங்களைச் சிக்கறுத்து, சாமகானத்தால் வாமதேவனை மகிழ்வித்த இராவணனை நோக்கி,

" அங்கண்மா ஞாலமும் விசும்பு மஞ்சவாழ்
வெங்கணாப் புன்றொழில் விலக்கி மேற்கொளாய்
செங்கண்மா லான்முகன் சிவன்கொ லாமென
எங்கணா யகனையு நினைந்த தேழைநீ"

என்று பதிவிஷயத்திற் பக்தி பூண்டுரைத்த சீதாதேவி, பெண்களின் இயல்பைப் பேச நேர்ந்த விடத்து,

" பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையி னெல்லிபோ லனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை யுணர வல்லரோ"

என்று பகர்ந்ததையும், பாரதம், பழம் பொருந்து சருக்கத்தில் கண்ணபிரான் முன்,

"ஐம்புலன் களும்போலவரும் பதிக ளாகவு மின்னும் வேறொருவர், என்பெருங் கொழுந ளுவதற் குருது மிறைவனே யெனதுபேரிதயம், அம்புவி தனிற்பெண் பிறந்தவ ரெவர்க்கு மாடவ ரிலாமையினல்லால், நம்புதற் குளரோ?"

என்று துரோபதாதேவி கூறியதையும், திருவிளையாடற் புராணம், வலை வீசின படலத்தில், பதிவாக்கியத்தில் பராமுகம் பாராட்டிய உலகமாதாவான சாக்ஷாத் மீனாக்ஷியம்மையாருக்கு நேர்ந்த துர்க்கதியையும் ஆராயும்போது எந்த விதத்தும் பெண் மக்களை இப்பேதைமைக்குணமானது வஞ்சிக்கக் காத்திருக்கின்றதென்றேற்படுகின்றது. ஆகவே, இதை நிவர்த்திக்கப் பெண்மணிகளுக்குத் தூண்டுகோல் பலகாலும் வேண்டுவது அத்தியாவசியமாம். சுடர்விளக்கும் தூண்டுகோலின்றிப் பிரகாசிக்கக் கண்டோமில்லை. உலகவியலுக் கின்றியமையாத மாதர்களின் நலத்தை முன்னிட்டு, அவர்களது அருமை பெருமைகளையும், அவற்றிற் சிரத்தையற்றபோது நேரக்கூடிய அனர்த்தங்களையும் பல நிதரிசனவாயிலாக விளக்கவல்ல நூல்கள் இக்காலத்திற்கு வேண்டற்பாலனவாயிருத்தலின், நமது

நண்பர் ஸ்ரீமான் செல்லப்பமுதலியாரவர்கள் சிரமம் பாராது பெருநூல்கள் பலவற்றுடன் அநுபவத்தையுந்தழுவி "மாத நீதி" என்னும் ஒரு சிறந்த நூலை வெளியிட வந்தது வியக்கத் தக்கதேயாம். நீதிகளையும் அவற்றாற் சித்திக்கும் சுபங்களை யும் எடுத்துச் சொல்வதினும், பயங்கரத்தைப் பயக்கக்கூடிய அநீதிகளையும் அவற்றால் வரும் அசுபங்களையும் எடுத்துச் சொல்வது, பெண்மக்களுக்கேயன்றி ஆண்மக்களுக்கும் விரை ந்து பயன்படுமாதலின் இந்நூல் பொருந்தியதொன்றே. பண் டிதர் முதல் பாமரரீறாகவுள்ள யாவர்க்கும் விளங்குமாறு, கூடிய வரையில், எளிய நடையில், பொழிப்புடன், இனிய வெண்பா வால், இது செய்யப்பட்டுளது; படிப்பவர்க்கு உற்சாகத்தையும் இல்லறப்பாங்கை யறிந்தொழுகும் பாக்கியத்தையும் பயக்கவல் லது. இப்பரோபகாரத்தைச் செய்த இந்நூலாசிரியருக்குத் தமி ழுலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டதேயாம். எல்லாம்வல்ல இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளையும் இகபர சுகங்களையும் அருள்செய்வானாக.

விருத்தம்.

பொருத்தமெலாம் பொருந்தநயம் பொருந்தவுயர் புலவர்ந லம் புகன்று போற்றத், திருத்தமிலா திருக்குமினூர் திருக்ககலுந் திருக்காலந் தேடி வாடும், வருத்தமெலா மாய்ந்திகண வரின்வ தன மலர்மறை வருத்த மேலா, மருத்தமெலா மமையமயி லனை மாத நீதியொன் றிங் கறைந்தா னம்மா.

இவ்வருநூ லீந்தவனு ரெனினெழில்செங் குந்தர்மர பிலங் கப் போந்து, தெவ்வரெனுந் தெரிவையருந் தெருண்டுரைக்குஞ் சிறப்பேத்தித் தெய்வ வேதங்,கவ்வுறுகான் குடனைந்தாய்க் கணி த்திடுநூல் கவினொழுகக் களிப்பி னோங்கி, எவ்வருமெச் சிடநய ங்க ளிணங்கவெடுத் தியம்பவல வேந்த லாமால்.

மங்கல்வ ராதவள மருவுகளம் பூரொளிர மகிழ்ந்து நோற்ற, செங்கல்வ ராயவள்ளல் செழுந்தவத்து ளெழும்பயனுய்ச் செனி

த்து நூன்முற், றுங்கல்வ ரோதயமால் செல்லப்ப நாவலனென் னொருருபே ருற்றே, இங்கல்வ ராதவண மிடபாடத் தெம்பெரு மாற் கிசைந்தோன் காண்மின்.

கோமளேசுவரன்பேட்டை 4—1—15 } ம. இராஜகோபால பிள்ளை, Govt. Pensioner.

சிறப்புப் பாயிரம்.

மகாவித்துவான் ஸ்ரீமத் கா-இராமசாமி நாயுடு அவர்க
ளியற்றிய

நேரிசை வெண்பா.

சீரார் களம்பூர்வாழ் செல்லப்ப நாவலனிப்
பாரார்க் குலவைப் பயந்தனன்காண்-ஏராரு
மாத ரநீதியென வாய்ந்தநூ லொன்றறிஞ
ராதரங் கூரநன் காய்ந்து.

சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதரும்
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய
ஸ்ரீமத், கோ-வடிவேலுசெட்டியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

இம்மையம்மை வீடென் றிவற்றின் றிறமறிந்து
செம்மை நெறிபொரூகுஞ் செல்லப்பன்—வெம்மை
மருவுதலை வாய்ந்துள்ள மாத ரநீதி
அருமையுறச் சொற்றா னமர்ந்து.

சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்.
ஸ்ரீமத் பூவை. கலியாண சுந்தரமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நற்கல்வி பயிலாத நங்கைமா
  ரொழுக்கத்தை நனிதி ருத்த
பொற்பமரும் வெண்பாவான்
  மாதரநீ திப்பனுவற் பொருந்தச் சொற்றான்
பற்பமணி யுபசுப்பி ரமணிய
  குலதிலகன் பன்னு லாய்ந்தோன்
சிற்பமலி களம்பூர்செல் லப்பநா
  வலனென்னச் சிறப்புற் றோனே.

வித்துவான் வல்லநகர்

வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றிய,

நேரிசை வெண்பா.

காந்த னுடனுட் கலந்தொப் புறவாழா
வேந்திழையார் தீய வியல்பினைத்தா-னுந்தக்கண்
டாக்கினன் மாத ரநீதியெனு நூலனையார்
மீக்குலவத் தேர்ந்துள் விழைந்து.

ஆங்கவன்யா ரென்னி னணிய வளமநகர்ப்
பாங்குறவாழ் வெய்தியநற் பாவலோ-னோங்குறுமாண்
வல்லப்பன் னூலும் வரன்முறையாக் கற்றுணர்ந்த
செல்லப்ப னுமித் திரன்.

வாலாஜா பேட்டை தமிழ்ப் பண்டிதர்,

ஸ்ரீமத், ஆ. கமலநாத முதலியாரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எந்தையாங் குமர வேளினுக்கிளைய
வீரவா குவினெழின் மரபிற்
சந்தமாய்ச் செல்லப் பன்னுதித் திட்டான்
சங்கர னடியவர்க் கினியான்
விந்தைசேர் கலிகா லத்தினில் வந்த
வீறிடு மாதரி னநீதி
சுந்தர மாகப் புடவியி னுள்ளோர்
துணிர்துபோற் றிடப்புகன் றனனே.

ஆரணி ஜாகிர்,

காமக்கூர், தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் மு. சுந்தரமுதலியாரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

சங்களமுங் கீராடைத் தாலப்பன் மங்கையர்கள்
பங்களைய நீதிசொற்றான் பத்தர்கடென்-பங்களையுஞ்
சேவலன்பின் னோர்மாபோன் சீர்ச்சளமூர்ச் செல்லப்ப
நாவலன்பின் னோறிய நன்கு.

மேற்படியூர் ஸ்ரீமத் பு. அப்புமுதலியாரவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நீர்பெறுபுவிவாழ் பெண்களின் கொடிய
நீர்மையை வகுத்துரைத் ததனுக்
கேர்பெறு மாத ரநீதியெ னப்பே
ரிட்டெவ ருக்குமீந் தனனால்
சீர்பெறு களம்பூர்ச் செங்குந்த மரபிற்
செங்கல்வ ராயனுக் குதித்த
பேர்பெறு மைந்தாம் வேதமா தியநூல்
பேசுசெல் லப்பநா வலனே.

மேற்படி ஜாகீர்
மருதபெரும்பட்டூர் உபாத்தியாயர்
கணக்கு ஸ்ரீமத் விஜயராகவப்பிள்ளையவர்க ளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அங்குந்த நிகரு நாட்டத் தரிவைய ரநீதி யிப்பா
ரெங்குந்தங் கிடவெண் பாவா லியற்றியோர் நூலீந் தானல்
தெங்குந்தண் கமுகு மாவுஞ் செறிபொழிற் களமூர் வாழுஞ்
செங்குந்த மரபோ னன செல்லப்ப நாவ லோனே.

மேற்படி ஜாகீர் குயப்பாளையம்
ஸ்ரீமத் கு. பழனியப்பசெட்டியாரவர்க ளியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இல்லறை வியல்பிற் சேற்றகற் பொழுக்க
மிற்சில மாதர்தம் மிழிந்த
புல்லிய நடையுஞ் செய்கையுங் குணமும்
புவியினில் யாவரு மறியச்
சொல்லினன் றமிழ்வெண் பாவினல் வகுத்துத்
தூயபல் வளஞ்செறி களம்பூர்
நல்லியல் புடைசெங் குந்தரி லுதித்த
நாமசெல் லப்பநா வலனே.

சென்னை, பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத் பூ. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள்
மாணவரு ளொருவராகிய ஸ்ரீமத்
ஆரணி மேடிகை சென்னகேசவுலு நாயுடவர்களியற்றி॥

நேரிசை வெண்பா

மாத ரநீதிதனை மன்னுகளம் பூர்வாழும்
தீதில்செங் குந்தர் திகழ்குலத்தில்—நீதிமிகுஞ்
செல்லப்ப நாவலவன் செந்தமிழ்வெண் பாச்சொற்றான்
இல்லை யிதற்கிங் கிணை

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நல்லப்பன் னூன்முறையி னன்கு ணர்ந்து
நவநவமாய்ப் பிரசங்க நலக்கச் செய்து
தொல்லைப்பல் வினையொழியப் பொருளை யீட்டித்
துணையற்று வந்தவர்க்குச் சபமே நாடு
மல்லற்றைங் குணத்தொளிர்வோன் மகிழ்வு கூர
மாதரநீ தித்திருநூல் வழங்கி னனச்
செல்லப்பன் பெரும்புகழைச் செப்பு தற்குச்
சேடற்கு மரிதெனின்யான் செப்ப லென்னே.

தமிழ்ப்புலவர் ஸ்ரீமத் நெல்லி அப்பாசாமி உடையாரவர்க
ளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நலஞ்செறி களம்பூர் மேய நல்லசெல் லப்ப வேந்தல்
வலஞ்செறிந் திலவச் சொற்றான் மாதர நீதி யென்னும்
புலஞ்செறி நூலொன் றுய்ந்து புலவரும் வியக்கு மாறு
பொலஞ்செறி நயங்கள்முற்றும் பொருந்திட மகிழ்ந்து
[மாதோ.

வித்துவான் ஸ்ரீமாந் ஆ மே. சென்னகேசவுலு நாயுடவர்கள்
மாணவரி லொருவரும், கோ. பாகூர் பிள்ளையவர்கள்
குமாரருமாகிய
ஸ்ரீமத் கோ. டா. தங்கவேற் பிள்ளையவர்க
ளியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தக்கபல் வளனும் புக்கவண் களம்பூர் தன்னில்வாழ் தன்னிய னுரிய,நற்கலை யனைத்து நன்குணர்ந்துள்ளச் சிக்கலைக் கடிந்தசெல் லப்ப, னிக்கட லுடைகொள் புவியினின் மாத ரநீதி யென்றியம்புமோர் நூலைத், தொக்கசெந் தமிழா லியற்றின னந் நூற் றெருகுப்பினை யார்வகுப் பவரே.

ஆரணி வித்வான் ஸ்ரீமத். செல்லக்குட்டி ஆச்சாரியவர்களியற்றிய நேரிசை ஆசிரியப்பா.

பூவரு நான்முகப் புத்தே ளுதவிய
மாவசுந் தரைபுழை மரீஇப வறநெறி
இழுக்கற நடைபெறற் கின்றி யமையா
விழுத்துணை யாமவர் மெல்லிய ரென்றே
மறைசொலும்; பல்லோர் மறந்தத முயர்வை
நிறைகற் பதனி னின்றிடா தந்தோ
பிறந்தகந் தனக்கும் புக்ககந் தனக்கும்
பிறந்திட நீங்காப் பெரும்பழி யிழிவார்
நடைநை யுறுதலை நன்குகாண் கின்றோம்;
தடையினுக் கஞ்சாத் தையலர் புரியும்
அநீதி யனைத்து மகவிடத் தெடுத்து
விநோதமா யோதி வெருவுறச் செய்து
நன்னெறி யதனின் மன்னிடு மாறும்
புன்னெறி யதனைப் போக்கிடு மாறும்
அன்னவர் பொருட்டு மாத ரநீதி
என்னுமோர் நூலை யெளிய நடையினில்
வெள்ளைப் பாவால் வியன்சுவை யமையத்
தெள்ளிதி னுரைத்தான் சீருறுங் களம்பூர்
செய்யசெங் குந்தர் செழுமர பதனில்
வையம் புகழ வயங்கிசை வளரச்
செங்கல்வ ராயமால் செய்தவத் துதித்துத்
தங்குறு கலைகள் சகலமுந் தேர்ந்து
ஐந்தா மறையென வந்தார் பாரதம்
அந்தா ரணியோர் சிந்தா குலமற
ஓத வல்ல உத்தமன் நற்குணன்

போத மிக்க புண்ணியன் புரம்பொடி
நம்பன் றிருவடி நாளும்போற்றும்
அன்ப னுஞ்செல் லப்ப நாவலன்
என்று மேலோ ரொன்றும்
நன்று வாழ்த்து நாமவேல் வேளே.

பச்சையப்பன் காலேஜ் தமிழ்பண்டிதர்

ஸ்ரீமத் - கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

பொன்னேர் மாதர்தம் பொலன்விழி நிகர்க்கு
முன்னே ரிளங்கபன் மொய்ந்நீர் மிகுவயற்
களம்பாய் வளத்துக் களம்பூ ராளன்
நலங்காப் பன்னூ னலங்காண் புலத்தன்
பாவிய வியன்பொருட் பாவிய னுவன்
கந்தர விடத்தோன் சந்தரத் தமைந்த
கங்கையின் குலத்தோன் றுங்கநன் மனத்தோன்
சொல்லொப்ப வமைந்த செல்லப்ப னென்போன்
கற்பக மமையாக் கடுஞ்செயன் மகளிர்
புன்செய லியலெல்லாம் புலங்கொளத் தொகுத்தீண்
டறிவிலா மாத ரநீதி யெனும்பெயர்
அமைத்தவிர் வெண்பா யாப்பினி லணியுறத்
தந்தன னோர்நூல் தழைதமிழ் மொழியில்
நந்தலில் குணத்தோர் நன்றெனக் கொளவே.

உ

சிவமயம்.

மாதர் அநீதி

மூலமும் உரையும்.

விநாயகர் காப்பு.

நேரிசை வெண்பா.

பாருலகின் மாதர் பயிற்று மநீதிகளைச்
சீருலவும் வெண்பாவாற் செப்பவே—யேருலவு
மாதங்க வத்திரனை மாமனெனப் பெற்றவனை
மாதங்க வத்திரனை வாழ்த்து.

(இ - ள்) இந்நிலவுலகின்கண் பெண்கள் செய்யும் அநீதிகளைச் சிறந்த வெண்பாக்களாற் பாட, அழகிய பொன்னுடையுடுத்த விஷ்ணுமூர்த்தியை மாமனாகப் பெற்றவரும், யானைமுகம் படைத்தவருமாகிய விநாயகரை மனமே நீ வாழ்த்தக் கடவாய் என்றவாறு. (மாதங்கம்-பொன், யானை; வத்திரம்-ஆடை, முகம்). 1

முத்தேவிகள் காப்பு.

மாத ரநீதியெனும் வைப்பனைய விப்பனுவற்
கோதுகுறை யொன்றுவ தொன்றுமற்-சீதானர்க்
காக்கமன தேவி யருமருகி தங்கையிவர்
காக்கமன தேவிநிற்பர் காண்.

(இ - ள்) மாதர்கள் அநீதிகளைச் சொல்லவந்த களஞ்சியம் போலும் இந்நூலுக்கு யாதாவதொரு குறையும் வராம லினிது சாக்குமாறு திருமாலின் செல்வம்போன்ற தேவியும் அரிய மருகியும் தங்கையுமாகிய முறையே இலக்குமி, நாமகள், பார்வதி இம்மூவருந் தத்தம் மனத்தைச்செலுத்தி முன்னிற்பார்கள் (எ - று).

கற்புடைமாதர் வணக்கம்.

குணமொன்று கேள்வன் குறிப்பை யறிந்தவ்
வணமொன்று கற்பின் மடவார்-மணமொன்று
பாதத் துணைகள் பணிந்துமனங் கொண்டிந்நூ
லோதத் துணிந்தே னுவந்து.

(இ - ள்) நற்குணம் வாய்ந்த நாயகன் குறிப்பை யறிந்து அவ்வண்ணம் நடக்குங் கற்புடைய மாதர்களின் மணம்பொருந்திய பாததாமரைகளைச் சிரசிற்சூடி மனத்தினுந் தியானித்து இம்மாத ரநீதியைச் சொல்லத் துணிவுற்றேன் (எ - று). 3

அவை யடக்கம்.

கல்லும்பொருள்கொடுத்துக் கைக்கொள்வர்கண் ணுதற்
புல்லுஞ் சிரமேறிப் போற்றலுறுஞ்-சொல்லுங்கா [குப்
லெண்ணூற் புலவீர்கா ளென்னூலா மிந்நூலைப்
பெண்ணூலென் றெண்ணேல் பிழை.

(இ - ள்) எளிய கல்லும் பொருள் கொடுத்துவாங்க மதிப்பை யடைகிறது; அறுகம்புல்லும் பரமசிவன் முடிமீது தரிக்கப் பெற்றுச் சிறப்பை யடைகிறது; ஆகையால் சொல்லுமிடத்து மேன்மையுற்ற நூல்கள் கற்ற அறிஞர்காள்! சிறியேனுரைத்த இந்நூலைப் பெண்ணூல்தானே யென்று பிழை யெண்ணவேண்டாம் (எ - று). 4

தொன்னூலாம் பன்னூலுஞ் சொன்னவொவ் வோர்விட
இந்நூலிற் சிற்சிலவந் தெய்தலா-லெந்நாளும் [யம்
ஆய்ந்தமனத் தூய ரதன்பெருமைக் காவேனு
மேந்தமனங் கொள்வா ரிதை.

(இ - ள்) முன்னோர்கூறிய தொன்னூல் பலவுஞ் சொல்லிய வெவ்வொரு விஷயங்களிற் சிற்சில இந்நூலின்கண் வந்துள்ளன; அக்குணத்தைப்பற்றியாகிலும் எந்நூலையும் ஆய்ந்த மனத் தூய்மைவாய்ந்த பெரியோர்கள் இதை யேற்றுக்கொள்ள மனம் வைப்பார்கள் (எ - று). 5

மட்டிச் சிறுவர் மனத்தைத் திருப்பவெனிற்
றிட்டி யடித்துத் திருப்புவரஃ-தொட்டி
யநீதியென மாதர்க் கறைந்தே னிதனை
நனீதியெனக் கொள்வார் நயந்து.

(இ - ள்) மட்டிப்பயல்களின் மனத்தைத் திருப்பி நல்வழியிற் புகுத்த வெண்ணிய தாய்தந்தை உவாத்தி முதலாயினோர் அவர்களைத்திட்டியும் அடித்தும் வசமாக்குவதுபோன்று பெண்கட்கு நீதியைக் கூறில் ஏற்காதென்று அநீதியைக் கூறினேன்; இதன் கருத்தை நோக்குமிடத்து இது நல்ல நீதியென்றேயுலகம் பாராட்டும் (எ-று). 6

நூல்.

ஆதியுகத்தி லடுங்கூற் றிரேணுகைபின்
னேதுமிரண் டாம்யுகத்தி னெண்சீதை-மோதிப்
பகைத்தமூன் றாம்யுகத்திற் பாஞ்சாலி நான்கில்
அகந்தோறுங் கூற்றென் றறி.

(இ - ள்) முதல் யுகத்தி லிரேணுகையும் இரண்டாம் யுகத்திற் சீதையும் மூன்றாம் யுகத்தில் திரௌபதையும் கொல்லும் எமனாயிருந்தனர். இந்நான்காவது யுகத்தில் வீடுதோறும் பெண்களே எமனாயினரென்றவாறு. 1

பொய்வார்த்தை நாளும் புகன்று பலர்க்கழிவு
செய்தார்த் திடுங்கொடிய சேயிழையார்-நெய்வார்த்துச்
சோறுபடைத் தாலுஞ் சுகமென் றருந்தியெவ்
வாறுசகித் தீண்டிருக்க லாம்.

(இ - ள்) இல்லாத வொன்றை யுள்ளதாகச் சாதித்துப் பலபேருக்கும் ஆபத்துண்டாக்கி ஆரவாரிக்கும் கொடிய பெண்கள் நெய்யோடுங் கூடிய அன்னமிட்டாலுஞ் சுகமென்று சாப்பிட்டு, சகித்துக்கொண்டு இங்கு எவ்வாறிருக்கலாம் (எ - று). 2

பெட்டி நிறையப் பெரும்பணஞ் சேர்த்தஃதோர்நாள்
கொட்டியெண்ணிப் பார்க்கின்ற கோதைமார்-வட்டி
வெறும்பாழாச் சென்கின்றூர் வீணுச்சு தாணுய்ப்
பிறந்தநம் போல்வார் பிழைப்பு.

(இ - ள்) பெண்கள் தங்களுடைய சிலுவாணப் பெட்டி நிறையப் பெரும்பணத்தைச் சேகரித்து அதை யொருநாள் கொட்டி யெண்ணிப்பார்க்கையில் இவ்வளவு வட்டி வீணுய்விட்டதேயென்று வியாகுலப்படுகின்றதாஞல் ஆணுகப் பிறந்த நம்முடைய பிழைப்பு வீணுகப் போய்விட்டது (எ - று). 3

கந்த மலர்ப்பிரமன் காலத்துக் கேற்றூற்போல
தந்த மகத்தாசைத் தையலர்க்குச்-சொந்தமாய்ச்
செய்துவிட்டா ணுண்மக்கள் சேவகரா கப்பெருமை
கொய்துவிட்டான் யாதோ குறை.

(இ - ள்) கமலவாசனுகிய பிரமன் காலத்துக்கிசையப் பெண்களுக்குத் தத்தம் வீட்டுப் பெரியதனமாகியஅரசாட்சியைக் கொடுத்து ராஜாக்களாக்கி அதே வீட்டிலுள்ள ஆடவர்களையெல்லாம் அவர்களுக்குச் சேவகர்களாக்கி ஆடவர்களின் பெருமையைப் போக்கிவிட்டான்; யாது குறையோ அறிகிலேம் (எ - று). 4

கையின் முறத்தைத் துடைப்பத்தைக் காய்சினத்தாற்
பைய வெடுத்தெறியும் பாவைபோ-டுய்வதனி
லெட்டா மிடத்தி லிருக்குஞ் சனியிலகப்
பட்டேனுந் தீர்க்கலாம் பாடு.

(இ - ள்) சிறிது கோபம் வந்த மாத்திரத்தில் கையிற்கொண்ட முறத்தையும் துடைப்பத்தையுந் திடீரென விட்டெறி

கின்ற பெண்களுடனே வாழ்வதைக் காட்டிலும் அட்டமச்சனியில் அகப்பட்டுச் சுகப்படலாம் (எ - று). 5

குணங்கலையச் செய்து குடும்பத்தை வாட்டி
அணங்கு விளைக்கும் அணங்கு-சுணங்கனிலும்
மேதியிலும் பன்றியிலு மேன்மையிலாக் கத்தபத்தின்
சாதியிலுங் கீழென்றே சாற்று.

(இ - ள்) ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள மாமனார் மைத்துனர் முதலானோருடைய குணங்கள் மாறுபடவருத்தி யுபத்திரவத்தைச் செய்துவரும் பெண்களை எருமை, பன்றி, மேன்மையில்லாத கழுதை இவைகளினுங் கீழான ஜன்மமென்று சொல்வாய் (எ - று). 6

7. தெருவிற் கலகஞ் சிறிதுவரக் கண்டு
செருவிற்கு நானென்று செல்லுந்-தெரிவைக்குக்
கொண்ட கணவனுயிர் கொண்டுளனே யானாலும்
முண்டையெனப் பேரிடவாய் மூந்து.

(இ - ள்) வீதியிலே கொஞ்சம் கலகம்வரக் கண்டதும் அதைப் பெரிதாக்கிச் சண்டைக்குத் தொடைதட்டிச்செல்கின்ற பெண்டிரையுடைய புருட னுயிரோடிருந்தாலும் அவனை முண்டையென்று பேரிட வாயே நீ மூந்துவாய் (எ - று). 7

ஆண்பிள்ளை யென்பா ரனைவருஞ் சின்னாளிற்
சாண்பிள்ளை யாய்விடுவார் சத்தியமே-மாண்பில்லாப்
பெண்களுக்கு வீட்டுப் பெரியதனத் தைக்கொடுத்துக்
கண்களுக்கு முன்வைத்தக் கால்.

(இ - ள்) குணத்தாற் பெருமையில்லாத பெண்களுக்கு வீட்டதிகாரத்தைக் கொடுத்தால் அக்குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகள் அனைவரும் சாண்பிள்ளைகளாய் கண்களுக்கு முன் விரைவிற் பெருமை யிழந்துவிடுவர் (எ - று). 8

கொண்ட கணவன்பால் கோள்கள் பலசொல்லிச்
சண்டை விளைக்கின்ற சண்டாளப்-பெண்டணையிம்
மண்டலத்திற் பல்லுயிரும் வாங்கிப் பழியேற்குந்
தண்டுமா ரிக்கிணையாச் சாற்று.

(இ - ள்) மணஞ்செய்துகொண்ட கணவனைத் தன்வசப் படுத்திக் குடும்பத்திற் பல கோள்களை அவனிடங் கூறி வீண் சண்டை மூட்டிவிடுகின்ற பெண்மகளை இப்பூமியில் பலவுயிர் களையும் வாங்கிப் பழிசுமக்க வஞ்சாத தண்டுமாரிக்கு நிகரென்று சொல்வாய் (எ - று). 9

ஆரேனும் வீதியிலே யாடவர்வந் தால்வரை
கேரேயுற் றுப்பார்க்கு நேரிழையைப்—பேரேற்ற
பெண்டிரெனச் சொல்விற் பிழையுண்டா மாதலினாற்
சண்டியெனச் சொல்லத் தகும்.

(இ - ள்) வீதியில்வரும் ஆடவர் யாராயினும் அவரையுற்று நோக்குகின்ற பெண்களைப் பெண்களென்று சொன்னாற் பிழை நேருமாகையால் அவர்களைச் சண்டிகளென்பதே தகுதியாம் (எ - று). 10

பொன்னே யனைய புருடன் புசிக்கவரு
முன்னே புசித்துறங்கு மூதேவி-தன்னைபம்
பெற்றுவாழ் கின்றதினும் பேயோடு நேயமது
பற்றிவாழ் கின்றதே பற்று.

(இ - ள்) பொன்போன்ற அரிய புருடன் அன்னமுண் ணவரு முன்னர்த் தான் புசித்து நித்திரை செய்யும் மூதேவி யுடன் நேசங்கொண்டு வாசஞ்செய்வதைவிடப் பேய்களை நேசி த்து வாழுதல் அதிகப் பற்றுடைத்தாம் (எ - று). 11

கூற்றைக் கரவடரைக் கொல்லே டரையரவை
ஆற்றைப் பெருங்காற்றை யஞ்சுமிடி-யேற்றைமிக
வெய்யமத வேழத்தை வெம்புலியை நம்பலாந்
தையலரை நம்பத் தகா.

(இ - ள்) இயமனையும் திருடரையும் கொலைசெய்யும் வேடரையும் சர்ப்பத்தையும் ஜலப்பெருக்கான ஆற்றையும் மோதுவதான கடுங்காற்றையும் அஞ்சச்செய்யும் இடியேற்றையும் மிகவுங்கொடிய மதம்பிடித்த யானையையும் கொடிய புலிகளையும் நம்பினாலும் பெண்களை மாத்திரம் நம்பத்தகாது (எ - று). 12

வாசற் படியில் வருவார்போ வாருடனே
பேசிச் சிரித்திருக்கும் பேதைப்பெண்-மாசுற்ற
சாவடியிற் கூசாமற் சங்கீதம் பாடுகின்ற
தேவடியாட் காளென்னத் தேர்

(இ - ள்) தெருவாசற்படியி லிருந்துகொண்டு வருவாருடனும் போவாருடனும் வார்த்தையாடிச் சிரித்துச் செருக்கியிருக்கும் அறிவில்லாத வொரு பெண் குற்றம்பொருந்திய சாவடியிற் சங்கீதம் பாடுகின்ற தேவடியாளின் வேலைக்காரிக்கு நிகராவாள் என்றறிவாய் (எ - று). 13

கண்ணாலஞ் செய்த கணவன் மனமஞ்ச
வெண்ணாமற் பேசி யிரைச்சலிடும்-பெண்ணோடு
வீட்டிலே வாழ்வதிலும் வெம்புலிகள் வாழ்கின்ற
காட்டிலே வாழ்தல் கவின்.

(இ - ள்) தன்னைக்கலியாணஞ் செய்துகொண்ட நாயகனிடம் நெஞ்சம் அஞ்சும்படி மதியாமல் சத்தித்து வார்த்தையாடும் பெண்ணுடனே வீட்டில் வாழ்வதைவிடக் கொடிய புலிகள் வாழ்கின்ற காட்டில் வாழ்வது அழகாகும் (எ - று). 14

தன்வீட்டுச் செய்தி சகலமும் மற்றொருவ
ரின்வீட்டுக் கேகி யியம்பிவரு-மின்வீட்டுஞ்
சிற்றிடைய வஞ்சிதனைத் தேவியெனப் பெற்றுடைய
பற்றிடைய வைப்பதே பண்பு.

(இ - ள்) தனது மனையில் நிகழும் விஷயங்க ளனைத்தையும் பிறரது வீடுசென்றுசொல்லிவிட்டு வருகின்ற மின்போன்ற நுண்ணிடையையுடைய வஞ்சியைத் தேவியென்று நம்பியிருக்கும் பற்றைத் தூரத்தே வைப்பதுஆடவர்க்கறிவாகும் (எ-று).15

கச்சேரி தன்னிற் கணவன்கை கட்டிநிற்க
வைச்சாளொருத்திதன் வல்லமையா-லிச்சேதி
காதாலே கேட்டதன்று கண்டதுண்டு பெண்டிரைமற்
றியாதாலே நம்புவதி யாம்.

(இ - ள்) தனது கணவனைக் கச்சேரியிற் கைக்கட்டிக் கொண்டு நிற்கும்படி யொருபெண் சாமர்த்தியமாக வைத்து விட்டாள். இச் சேதி காதாலே கேட்கப்பட்டதல்ல, பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டதொன்று; ஆதலால் பெண்களை எந்த விதத்தினுல் நம்பலாம் (எ - று). 16

தினந்தோறுஞ் சண்டைக் கிழுத்துத் திரிவார்
இனந்தோறும் போய்ப்போ யிருப்பாள்-வனந்தோறுஞ்
சல்லியத்தைச் செய்து தடையின்றிச் சஞ்சரிக்கும்
வல்லியத்தை யொப்பாண் மதி.

(இ - ள்) நாடோறுஞ் சண்டை யிழுத்துத் திரியும் பெண்கள் கூட்டத்திலே தனக்கும் ஒரு சண்டை கிடைக்குமாவென்று திரிகின்ற பெண்ணுனவள் வனந்தோறுங் கொலை செய்து சஞ்சரிக்கின்ற தடைக்கஞ்சாத புலியை நிகர்ப்பாளென மதிப்பாய் (எ - று). 17

வானத்து மீனத்தை வாரிக் கரைமணலைக்
கானத்துப் பல்மரநவைக் கார்த்துளியை-ஞானத்துக்
கொண்டு கணக்கிடலாங் கோதையர்தம் பேராசை
கண்டு கணக்கிடலா கா.

(இ - ள்) வானத்துள்ள வுடுக்களையும் கடற்கரை மணலையும் கானத்துள்ள பல மரங்களையும் மழைத் துளிகளையும் ஞானத்தைக் கொண்டு கணக்கிட்டாலும் பெண்களின் பேராசையைக் கணக்கிட முடியாது (எ - று). 18

மாதொருத்தி பேசின் மகிதலமெல் லாநடுங்கும்
மாதிருவர் பேசில்விழும் வான்மீன்கள்-மாதரோரு
மூவர்பே சிற்சுவறு முந்நீர் பலர்பேசி
லாவதியா தோவென் றறை.

(இ - ள்) ஒரு பெண் பேசினல் உலக மொத்தமும் நடுங்கும். இரண்டு பேர் பேசினல் வானிலுள்ள நக்ஷத்திர கணங்களுதிரும். மூன்று பெண்கள் பேசினல் கடல்கள் வற்றிவிடும். பல பெண்கள் பேசினல், யாது அனர்த்தம் விளையுமோ அறிகிலம் (எ - று). 19

கொம்புடைய வெம்பரியைக் கோலவெண் காக்கைதனை
அம்புவியிற் பூவெடுக்கு மத்தியினை—யம்புவிழை
காலுற்ற மீனதனைக் கண்டாலுங் காண்பரோ
மாலுற்ற மாதர் மனம்.

(இ - ள்) கொம்புமுளைத்த குதிரையையும், அழகிய வெள்ளைக் காகத்தையும், பூவிட்டிருக்கும் அத்தி விருட்சத்தையும், ஜலத்தை விரும்பும் காலையுடைய மீனையும் கண்டாராயினும் பெண்களின் ஆசை தங்கிய மனத்தைக் காணத் திரிமூர்த்திகட்கும் முடியாது (எ - று). 20

எட்டியிலே யுண்டோ வினிய சுவைப்பலா
கொட்டியிலே யுண்டோசெங் கோகனகம்-முட்டிபுகும்
பேதையர்பா லுண்டோ பெருமை பெருமையிலாக்
கோதையர்பா லுண்டோ குணம்.

(இ - ள்) எட்டி மரத்தில் பலாப் பழம் பழுப்பதில்லை; கொட்டிச்செடியில் தாமரை பூவாது; பிச்சை யெடுப்போரிடத்தில் பெருமையிராது; பெருமையில்லாத பெண்களிடத்தில் குணமிராது (எ - று). 21

கூட்டாளித் ரோகங் குருத்துரோகந் தந்தைதாய்
மாட்டாருந் த்ரோக மறந்தியற்றி—மீட்டாலும்
வாழ்க்கை யுடையமண வாளற்குச் செய்துரோக
மீட்கை யரிதே யினூர்க்கு.

(இ - ள்) கூட்டு வியாபாரத்தில் ஒருவனை யொருவன் செய்யும் நம்பகத் துரோகமும் வித்யா குருவுக்குச் செய்யும்

துரோகமும் தந்தை தாய்க்குச் செய்யும் துரோகமும் ஆகிய இவைகளால் வரும் பாபங்களை நீக்கிக் கொண்டாலும் பெண்கள் தங்கள் பர்த்தாவுக்குச் செய்யும் துரோக பாவத்தை நீக்க முடியாது (எ - று). 22

கீர்த்தி யுடையதங் கேள்வன் விடையின்றித்
தேர்த்திருவி ழாவென்று செலகின்றார்—நேர்த்தியிலா
அம்மா தரைநரகத் தந்தக்ன் றாதுவர்கள்
எம்மா திரிவாட் டிடார்.

(இ - ள்) புகழ்ச்சியையுடைய தங்கள் புருடருத்தரவின்றிப்பெண்கள்தேரென்றுந் திருவிழாவென்றும் போகின்றார்கள். இத்தகைய யோக்யமற்ற பெண்களை எவ்வாறுதான் நரகத்திலிட்டு யமபடர்கள் வாட்டாமல் விடுவர்கள் (எ - று). 23

ஆடவனோர் பெண்ணு யதிற்பெண்ணோ ராடவனைப்
வேடந் தரித்துவரும் வெட்கமிலா—நாடகங்கள்
பார்ப்பதற்குச் செல்கின்றார் பாவைபர்க ளெப்பாவந்
தீர்ப்பதற்கெக் காலஞ் செலும்.

(இ - ள்) ஆண்பிள்ளைபெண்பிள்ளையாகவும் பெண்பிள்ளை ஆண்பிள்ளையாகவும் வேடமாறி வரும் வெட்கங்கெட்ட நாடகங்களைப் பார்ப்பதற்குப் பெண்கள் புறப்படுகிறார்கள்; அதில் வரும் பாபங்களை அப் பெண்கள் எக்காலத்தில் ஒழிப்பார்களோ அறிகிலேன் (எ - று). 24

சாக்கிட்டுப் பேசுந் தடிக்கழுதைப் பெண்களுடன்
வாக்கிட்டு வாதாடி வாழ்வதிலுந்—தூக்கிட்டுக்
கொண்டிறந்து பேயாகிக் கோரப் பிணம்பிடுங்கி
யுண்டிருந்து வாழ்வ துயர்வு.

(இ - ள்) தனக்குப் பகையான வொருவரைக் கண்டதும் அவர் மனம் வருந்த வேறொருவரை வைவதுபோல் சாக்கிட்டு வைகின்ற தடிக்கழுதை போன்ற பெண்களுடன் வாய் கொடுத்

து வழக்காடி வாழ்வதைவிடத் தூக்கிட்டுக்கொண்டு பிராணனை யொழித்துப் பிசாச வடிவந் தாங்கி மசானத்திற் பிணங்களைப் பிடுங்கித் தின்று வாழ்ந்திருப்பது மேலாகும் (எ - று). 25

அன்னமிச் சாதுக் களியென்ற மைத்துனற்கு
முன்னவன் றேவி முனிந்துரைத்தாள்-சின்னவனே
யுன்கண் ணியத்துக்கு மோர்விருந்தோ சீயினிநீ
யென்கண் ணியம்பாதே யென்று.

(இ - ள்) இப் பெரியோர்க்கு அன்ன மிடுவா யென்ற மைத்துனனை நோக்கி அவனது தமயன் மனைவி, கடைப்பட்டவனே! உனது கௌரவத்திற்கும் ஒருவிருந்தோ? சீ! இனியென்னிடம் நீ இவ்வாறு சொல்ல வாராதே யென்று கோபித்துச் சொன்னாள். ஆதலால் குடும்ப ஒற்றுமை எவ்வாறு நீட்சிபெறும் (எ - று). 26

மெத்த செருக்கிக்கை வீசிநீ யேகுகிறாய்
பொத்தற் செருப்பாற் புடைப்பெனென்றான்-புத்தியிலா
மூடாகா தற்ற முறம்பஞ்ச மோவெனக்கிங்
கீடாநீ யென்றாள் விரைந்து.

(இ - ள்) மிகவும் கருவித்துக் கைகளை வீசிக்கொண்டு யாவரையும் எசிக்கொண்டு இதே தொழிலா யிருக்கிறாய் ஆதலாலுன்னைக் காலுக்குதவாச் செருப்பாற் புடைத்துப் புத்தி வரச் செய்வேனென்ற புருடனை நோக்கி அவன் மனைவி, புத்தியில்லாத மூடனே! காதில்லாத முறங்கள் என் கைக்குப் பஞ்சமல்ல, நீ யீடாகமாட்டாய் என்றாள். அவன் இவள் கூச்சலுக்கு முன்னிற்கமுடியாமற் போய்விட்டான் (எ - று). 27

சேயைத் தொடையிற் சிவக்க நிமிட்டிபழ
வாயைமூ டென்றடித்து வைவாளை-நாய்கன்வந்
தேனிப் படிசெய்தா யென்றவுட னேசட்டிப்
பானைபடும் பாட்டைநீ பார்.

(இ - ள்) குழந்தையைத் தொடையிலே நிமிட்டி யழச்செய்து அதை வாய் மூடு என்றடித்து வைதுகொண்டிருக்கும் ஒருத்தியை அவளது கணவன் சத்தங்கேட்டு வந்து ஏனடி இவ்வாறு செய்கிறு யென்று கேட்டதும் வீட்டிலுள்ள பழங்கலங்கள் என்ன பாடுபடுகின்றன பார் (எ - று). 28

பள்ளிக் கழகம் பயிலாமற் கட்குடித்துத்
துள்ளித் திரிகின்ற துட்டருட—னுள்ளிப்
பரிவையுறு நட்பிற் பழிக்கிளையா வஞ்சத்
தெரிவையர்நட் பேமிகவுந் தீது.

(இ - ள்) கல்விகற்காமல் கட்குடி முதலியவற்றில் பிரவேசித்துத் துள்ளுங்காளைகளாகத்திரியும் துன்மார்க்கருடன் சகவாசம் புரிந்து பின்னர் உண்டாகும் கேட்டை நினைத்து வருந்துவதைக் காட்டிலும் பழிபோடுதற் கிளையாத வஞ்சகமுற்ற பெண்களுடன்பழகியிருத்தல் மிகவும் தீங்கையுண்டாக்கும் (எ-று). 29

காவிமலர் போலக் கறுத்தவிழிப் பெண்களெனும்
பாவியரைக் கண்டாற் பகீரெனுமே-நாவினயங்
காண்புலவர் போற்றுங் கடல்புடைசூழ் காசினியின்
மாண்புடைய மேலோர் மனம்.

(இ - ள்) கடலானது புடை சூழ்ந்த வுலகின்கண் நாவின் சொன்னயத்தைக் காணும் அறிவாளிகள் புகழ்ந்து பேசும் மாட்சிமை தங்கிய சாதுக்களின் இதயம் காவிமலரைப் போன்ற கண்கள் வாய்ந்த பெண்களென்கிற பாவிகளைக் கண்டவுடன் பகீரெனப் பற்றி யெரியும் (எ - று). 30

மான மழியும் மதியழியும் வாழ்வழியுந்
தான மழியுந் தவமழியும்—வானந்
தனிற்கண்வை யாத தடிக்கழுதைப் பெண்க
ணினைப்பிற்பட் டோர்க்கு நிதம்.

(இ - ள்) சுவர்க்கம் நரகம் என்பதை யறியாத மந்தமதி பெற்ற கழுதைக் கொத்த பெண்களின் மையலாகிய வலையிலகப்

பட்ட மார்தருக்கு மானம், அறிவு, வாழ்வு, தானம், தவம் இவை யாவும் உடனே அழிந்துவிடும் (எ - று). 31

பெரிய குடும்பம் பிரிவதுவுஞ் சண்டை
புரிவதுவுங் கச்சேரி போய்ப்போய்த்-திரிவதுவுந்
தந்தலைவற் குப்பெண்கள் சாற்றுந் தலைக்கணையின்
மந்திரத்தா லென்றே மதி.

(இ - ள்) பெரிய குடும்பங்கள் வேறுபடுவதும் சண்டையிட்டு மாறுபடுவதும் கச்சேரிகளுக்கு அடிக்கடி சென்று இடையூறு படுவதும் பெண்கள் தங்கள் புருடர்களுக்குப் படுக்கையிலுபதேசித்து விட்ட தலையணை மந்திரத்தின் மகத்துவமேயன்றி வேறில்லை (எ - று). 32

தானியத்தை விற்றுத் தனந்தேடித் தாயளித்த
தேனளிக்க வென்றுசொலி யேமாற்று-மான மிலாள்
சொல்லு மளவிலெம தூதர்போற் சோரர்வந்து
கொல்லு மளவுங்-கொடாள்

(இ - ள்) குடும்பத்தில் வருந் தானியங்களைத் திருடி விற்றுப் பணஞ் சேர்த்துப் பங்கிடுங்கால் தாயாதிகள் அப்பணத்தைக் கேட்டால் என் தாயார் கொடுத்தது அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி யேமாற்றி விடுகின்ற மானமில்லாத பெண்கள் சொல்லுமிடத்து நமதூதரைப்போலத் திருடர்கள் வந்துபிடித்து அடித்துக் கொல்லும் வரைக்கும் அதைக் கொடுக்க மாட்டார்கள் (எ - று). 33

யார்வந்த போது மெழாம லிறுமாந்து
நேர்வந்துட் கார்ந்திருக்கு நேரிழையைப்-பேர்வந்த
பெண்டிரெனச் சொல்லிற் பிழையுண்டா மாதலினாற்
சண்டியெனச் சொல்லத் தகும்.

(இ - ள்) ஆடவரில் யார்வந்த போதிலும் எழுந்திராமல் இறுமாப்புடன் எதிரில் குந்தி யிருக்கும் பெண்டுகளைப் பெருமை வாய்ந்த பெண்டென்னும் அப்பெயரை மாற்றி எருமைக் கடாக்களென்று கூறிற் பிழை யில்லை (எ - று). 34

பாரை யழிப்பது பஞ்சகா லம்பெரிய
வூரை யழிப்ப துதாசினன்-தாரைபொழி
காரை யழிப்பது காற்றுத்தன் றூப்தந்தை
பேரை யழிப்பது பெண்.

(இ - ள்) பசிமிகுந்த பஞ்ச காலம் உலகத்தைச் கெடுக்கும், நெருப்பானது பெரிய வூர்களைக்கெடுக்கும், காற்றானது மழைத் தாரையையுடைய மேகத்தைக் கெடுக்கும், பெண்கள் தங்கள் தாய்தந்தையரின் பேரைக் கெடுப்பர்கள் (எ - று). 35

மரத்தைக் குறைப்பது வாட்படை தெய்வ
வரத்தைக் குறைப்பது வஞ்சந்-திரத்த
வனத்தைக் குறைப்பது வானரம் மாந்தர்
மனத்தைக் குறைப்பது மாது.

(இ - ள்) மரங்களை வெட்டுவது வாளாயுதம், தெய்வ வரங்களைக் கெடுப்பது வஞ்சனை, நிலைபெற்ற புட்பவனங்களை யழிப்பது வானரங்கள், மனிதர்களுடைய மனங்களை மாற்று வது மாதர்கள் (எ - று). 36

வாரணம்போல் வைர மனங்கொண்டு வாரணம்போற்
காரணமில் லாமற் கலகமிடு-மாரணங்கு
வாய்ப்பட்டு வாழ்வதிலும் வைத்தியராற் றீராத
நோய்ப்பட்டு வாழலா நோற்று.

(இ - ள்) யானையைப் போலே வைராக்கியத்தை மனதுட் கொண்டு சேவலைப் போலே காரணமில்லாமல் போர்புரிகின்ற பெண்களை எதிரிட்டு அவர்கள் வாயில் அகப்பட்டு வாழ்வதை விட மருத்துவரால் தீராத பெருநோய்வரத் தவமிழைத்து அந்நோயுடன் வாழலாம் (எ - று). 37

பாரியலைப் பொய்யென்ற பட்டினத்துப் பிள்ளையார்
நாரியரின் செய்கைகளை நன்குணர்ந்து-பேரினிய
மாதரெனச் சொல்லாது மாயையெனத் தீபநம
னாதரெனச் சொன்னார் துணிந்து.

(இ - ள்) இவ்வுலகைப் பொய்யென்றுகூறியநம்பட்டினத்துச் சுவாமிகள் பெண்களினது நடத்தைகளை முக்யமாக வுணர்ந்து துணிந்து மாதர் என்ற பேரைமாற்றி மாயை யென்றும் கொடிய யமனனுப்பிய தூதரென்றுங் கூறினர் (எ - று). 38

பிச்சைக்கு வந்தவனைப் பேசித் தெருமுடிவு
மச்சப் படுத்தி யனுப்பிடுவாள்-சிச்சியத்
தாடகையுஞ் சூர்ப்பநகை தானுமிவ ளெனர்வந்தா
லோடவழி தேடுவரென் றோது.

(இ - ள்) விடா மிண்டனைப்போலப் பிச்சைக்குவந்தாலும் அவனைத் தனது உரத்த குரலாற் பேசித் தெருக்கோடி வரைக்கும் திரும்பித் திரும்பிப் பார்த்து ஓடும்படி அச்சப் படுத்தித் துரத்தி விடும் ஒருத்தி எதிரே தாடகையும் சூர்ப்பநகையும் ஆகிய இரண்டு ராட்சதிகள் நேரிட்டுவிட்டால் இவளுக்கு முன் னிற்பரோ? சீ சீ ஓட வழி எப்படியென்றுபார்ப்பர் (எ - று). 39

தன்மாமி யார்கூந்தற் றன்கையிலுந் தன்கூந்தல்
வன்மாமி யார்கையிலும் வாய்ந்ததே - யென்மேனநம்
மானம்போய் விட்டதென மைந்தனொடு தந்தைதவக்
கானம்போய் விட்டான் கலந்து.

(இ - ள்) தனது மாமியார் கூந்தல் தன்கையிலும் தன் கூந்தல் மாமியார் கையிலும் அகப்பட்டுப் பெருஞ் சண்டைநேர்ந்ததால் தந்தை மகனை நோக்கி என்ன நமது மானம் போய்விட்டும் இங்கிருப்பதாவென்று சொல்லிப் புத்ரனுடன் தவஞ் செய்யக் கானம் போய் விட்டான் (எ - று). 40

தன்சுற்றந் தேடித் தருமுகமன் செய்துதலை
வன்சுற்றம் வந்தாலும் வாய்மூடித்-துஞ்சுற்ற
பெண்ணுட் குழைத்துப் பிழைப்பதினும் வேசரியாய்
வண்ணார்க் குழைப்பதே வாழ்வு.

(இ - ள்) தன் பந்துக்கள் வந்து அயல் வீட்டிலிருந்தாலுந் தேடிப்போய்த் தக்க வுபசாரங்கள் செய்தும் புருஷனுடைய பந்

தக்கள் வீடுதேடி வந்தாலும் அவருடன் இன்சொல்லொன்றுங் கூருமல் வாயை மூடிக்கொண்டு பொய்த்தூக்கந் தூங்கியும் இவ் வாருனநடக்கையையுடைய பெண்சாதிக்குப் பாடுபட்டுவாழ்வதி லும் வண்ணானுக்குத் துணி மூட்டை சுமக்கக் கழுதையா யிரு ந்து வாழலாம் (எ - று). 41

அன்னநடை யென்று மரம்பைத் தொடையென்றும்
மின்னலிடை யென்றும் வியன்முலைகள்—பொன்னின்
பருப்பதமென் றும்புலவர் பாடினு ரொன்றுஞ்
சரிப்படுமோ பெண்கட்குத் தான்.

(இ - ள்) அன்னம்போன்ற நடை யென்றும் வாழைபோ ன்ற தொடை யென்றும் மின்னல் போன்ற இடை யென்றும் பொன்மலை போன்ற முலை யென்றும் புலவர்கள் சிறப்பித்துப் பெண்களைப் பாடி யிருக்கிருர்கள்; மேற் கூறியதி லொன்ரு கிலும் சரியாகுமோ? (எ - று). 42

மந்தியிலே சேட்டையும் வன்புலியி லேகொலையுந்
தந்தியிலே வெம்மதமுந் தான்படைத்துப்-புந்தியிலா
வேதன்கை தேறியபின் மேதினிக்கு வேதைசெய
மாதரிடம் வைத்தான் மறம்

(இ - ள்) குரங்குகளுக்குச் சேட்டையும், வலிய புலிகளு க்குக் கொலைச் செய்கையும், யானைகளுக்குக் கொடிய மதத்தை யும் முன்னே படைத்துப் படைத்து நன்ருகக் கைதேறிய பிற கே விவேக மில்லாத பிரமன் பூவுலகத்துக்கு வேதனை செய் ய பெண்களிடத்தில் கொடுமையைவைத்தான் போலும் (எ-று)

வெய்ய மிருத்யுவை வீறுமகா மாரியொடு
வையகத்தி லேதண்டு மாரிகளைச்-சையநிகர்
மேதியனைத் தூதுவரை வீணே படைத்தாயிக்
கோதையரே போதுங் கொலைக்கு.

(இ - ள்) பிரமனே! நீகொடிய மிருத்தியு தேவதையையும் மகாமாரி தண்டுமாரி முதலிய மாரிகளையும் மலைபோன்ற கடா வாகனக் காலனையும் அவன் றூதரையும் வீணாக என்படைத்தாய்? கொலை செய்ய வுலகிலுள்ள இப்பெண்களே போதும் (எ - று).

உப்பில்லா வுண்டி யுதவினா யென்றவனைத்
துப்பில்லா வாண்மகனே சொல்வேனின் - றப்பில்லை
கைப்பில்லை செப்பமிள காயில்லை காதுக்குக்
கொப்பில்லை யென்றாள் கொதித்து.

(இ - ள்) இவ்வுணவில் உப்பில்லை யென்ற கணவனைநோக்கி அவன் மனைவி மனங்கொதித்து நீயும் ஓர் ஆண் மகனா? துப்பில்லாதவனே! உப்பில்லாதது உன்குற்றமா? என்குற்றமா? இது வொன்றுதானா இல்லை; கைப்பில்லை; மிளகாய் முதலிய வொன்று மில்லை; காதிலணியக் கொப்பில்லை; இவை உன் பண்
டவாளம்; வாய்மூடு என்றாள் (எ - று). 45

கழனிப் பயிரைக் களைமூடல் போலக்
கொழுநற் கிடுக்கண் கொடுக்கும் - பழியினரை
யீடாலிக் காசினியி லில்லா தினங்கெடுக்குங்
கோடாலிக் காம்பென்றே கொள்.

(இ - ள்) கழனியிற் பயிருடனே பிறந்து அதனை யழிக்குங்களையைப் போல நாயகனுக்கே துன்பத்தைச் செய்கின்ற பழிப்புடையநாரிகளைத் தன்னினத்தைத் தானே யழிப்பதில்தனக்கு நிகரில்லாத கோடாலிக்காம்பென்று தெரிந்துகொள் (எ - று).

காலையிலுஞ் சண்டை கடும்பகலி லுஞ்சண்டை
மாலையிலுஞ் சண்டையது மாளாமல் - வேலையிலே
யாதவன்போய்ப் பாதியிர வாகுமள வுஞ்சண்டை
மாதரிட மேதுதொழின் மற்று.

(இ - ள்) காலையிலும் மத்தியானத்திலும் மாலையிலுஞ் சண்டையிட்டு மாளாமற் சூரியன் அத்தமித்துப் பாதியிரவு

ஆகும் வரையிலுஞ் சண்டையிடுவதென்றால் பெண்களுக்கு வேறு தொழிலென்ன இருக்கும் (எ-று). 47

சொந்தமனி தர்க்கொன்றாய்ச் சுற்றந்தான் யாமுமென
வந்தமனி தர்க்கொன்றாய் வைத்துவைத்துப்-பந்தியிலே
வஞ்சிக்கு நெஞ்சத்து வஞ்சிக்கு மிஞ்சுமே
கஞ்சிக்குக் கெஞ்சுங் கருப்பு.

(இ-ள்) தனது நெருங்கிய பந்துக்களுக் கொருவிதமும் சற்று அன்னியமானவருக் கொருவிதமும் சாதங்கறிகளை வைத்துப் பந்தியில் வஞ்சனை செய்கின்ற பெண்களுக்கு குடிக்கக்கஞ்சியற்றுப் பிறர்பால் கெஞ்சியலையுங் கருப்புமிஞ்சிவிடும் (எ-று).

வஞ்சம் விளைத்தலால் வஞ்சியெனப் பேர்வாய்ந்தார்
விஞ்சும் அணங்கு விளைத்தலாற்-செஞ்ச
அணங்கென்னப் பேர்வாய்ந்தா ரந்தோ வவரை
யிணங்கென்னச் சொல்வா ரெவர்.

(இ-ள்) வஞ்சகங்களைச் செய்வதால் வஞ்சிகளென்றும் மிகுந்த துன்பங்களைச் செய்வதால் அணங்குகளென்றும் பெண்கள் பேர் பெற்றார்கள்; அந்தோ அவ்வாறாய பெண்களை இணங்கும்படிச்செய்பவர் யார்? அவர் அறிவில்லாதவரே (எ-று). 49

காரிகை யென்றொருபேர் கன்னியர்க்குண் டங்ஙனங்
காரிகை யென்பதலங் காரமல்-காரி
யெனக்கை யெனப்பிரித்தங் கெய்தும் பொருளை
மனத்திலே கொள்வீர் மதித்து.

(இ-ள்) பெண்களுக்குக் காரிகையென்ற வொரு பேருண்டு; அப்பேர் அழகைப்பற்றிப் பெரியோர்கள் வைத்ததன்று. காரி எனவும் கை எனவும் பிரித்தால்வரும் பொருளையே கொள்ளக்கடவீர்கள் (எ-று). காரி-சனி அல்லது விஷம்; கை-வெறுப்படை. 50

நெடும்பார்க்கு ளாயு ணிறைந்தவுட னேமன்
குடும்பத்தி லோருயிரைக் கொல்வா-னிடும்பைக்கு
வித்தான மாதர் விதியணுகா முன்குடும்ப
மொத்தமுங் கொல்வார் முனைந்து.

(இ-ள்) நீண்ட இப்பூமியின்கண் ஒரு குடியில் ஆயுள் பூர்த்தியான வோருயிரை யெமன் கொல்வான். துன்பவித்தான பெண்கள் விதி கிழியாத முந்தியே ஒவ்வொரு குடியினு முள்ள மொத்த வுயிரையு முனைந்து கொல்வார்கள் (எ-று). 51

வையம் புகழாவிவ் வாழ்க்கையினு நன்றென்றே
யையம் புகுந்தா ரறிவுடையார்-வெய்யகடுங்
கோவகருங் கூற்றுருவங் கொண்டபெண் டீர்தம்மைச்
சேவகரா யெண்ணுவதைத் தேர்ந்து.

(இ-ள்) அறிவாளிகள், வெவ்விய கோபத்தையுடைய நமனே யுருவுகொண்டு வந்ததென்னும் பெண்கள் ஒவ்வொரு தொழிலினும் தங்களைச் சேவகரைப்போல மதிப்பதைச் சிறிது தெரிந்தவுடன் வையகம்புகழாத இவ்வாழ்வைவிட ஐயம்புகுதல் நன்கென்று திறந்தார்கள் (எ-று). கோவ + கரும் - எதுகை நோக்கி ஒற்று குறைந்தது: 52

மண்ணிற் கடன்பட்ட மாந்தர்போற் றங்கொண்ட
பெண்ணிற் கிசைந்தொழுகும் பேதையார்-எண்ணிற்
பகைவர்பா லேவற் பணிசெய்வோர் போலச்
சுகமடையா ரென்றே துணி.

(இ-ள்) இவ்வுலகில் ஒருவனிடங் கடன்பட்டவன் எவ்வாறு அவனுக்கடங்கி நடப்பனோ அதுபோலத் தாங்கள் கொண்ட மனையாட்டிக்கு அடங்கி நடக்கும் அறிவிலிகள் அதிக பகையை மனத்தில் வைத்திருக்கும் அற்பரிடம் ஏவல் செய்வோரைப் போன்று சுகமடையார் (எ-று). 53

செய்திடுங் காரியத்திற் றீக்கு வருங்கலக
மெய்திடுங் கண்ணியம்போ மீனச்சொற்-பெய்திடு

மாதலால் வீட்டி னதிகாரம் பெண்கடமைக்
கீதலா காதென் றியம்பு.

(இ - ள்) செய்யுந் தொழில்களிலெல்லாங் கெடுதியே நேரிடும்; கலகங்களுண்டாகும்; பெருமையழியும்; இழிவாகிய சொற்கள் நுழையும்; ஆதலால் வீட்டதிகாரங்களைப் பெண்களுக்குத் தரலாகாது (எ-று) 54

மாதரசு செய்யும் மனையகத்தி னன்மொழியு
மாதுலருஞ் செல்வதில்லை யன்பில்லா-மூதேவி
அல்லும் பகலு மமர்ந்தவிடஞ் சீதேவி
செல்லுமோ தன்னருளிற் செப்பு.

(இ - ள்) மூதேவி குடிபுகுந்த வீட்டில் தன்னருளைக்கொண்டு சீதேவி யெங்ஙனஞ் செல்லாளோ அங்ஙனமே பெண்ணரசு செய்யும் வீட்டில் யாசகரும் அவரது நல்ல வசனங்களுஞ் செல்வதில்லை (எ-று). 55

கடல்விடத்தி னல்விரக்கங் கண்டோ நெருப்பிற்
படவுடல்வே காதிருக்கப் பார்த்தோந்-தடநெடும்பார்ப்
பெண்டாக வந்து பிறந்தவரிற் சாந்தகுணம்
உண்டாகக் கண்டறியோ முற்று.

(இ - ள்) கடலிலுண்டான விஷமும் சாந்தமடையக்கண்டோம். சரீரத்திலேற்ற நெருப்புஞ் சுடாதிருக்கப் பார்த்தோம். இந்நீண்ட வுலகில் பெண்களாகப் பிறந்தவர்களிற் சாந்தகுணமுள்ளவர்களைக் காணோம். (எ-று). 56

செம்மல் தசரதன்றன் சேய்நீத் துயிர்துறந்தான்
றம்மவரோ டற்றுன் றசக்கிரிவ-னிம்மைப்
பழியார்சுந் தோபசுந்தர் பாழானர் கிள்ளை
மொழியார் மொழிகேட்டு முன்.

(இ - ள்) கிளிபோன்றமொழியையுடைய பெண்கள் வார்த்தையைக் கேட்டதால் தசரத சக்கரவர்த்தி தமது புத்திரனையிழந்து பிராணனையுமிழந்தார். தசக்கிரீவனாகிய இராவணன் தனது

பந்து மித்திரரோடு தானுமொழிந்தான். இம்மையிற் பழிப்புடைய சுந்தோபசுந்தர் தங்கள்சகோதர வாத்சல்லியம்நீங்கி யாச்சரிய மோங்கிப் போரிட்டு மடிந்தனர். (எ-று). 57

பொய்யுங் களவும் புணர்சூ துடன்வாதுஞ்
செய்யுங் கொலையுஞ் செருவுமெலாம்-வையகந்
தனிற்கொடிய காமத் தழற்கண்ணார் கண்ணே
செனித்தவென நன்ருய்த் தெளி.

(இ-ள்) இந்நிலவுலகத்தில் கொடிய அக்கினி போன்ற காமப்பார்வையையுடைய பெண்களிடத்தில் பொய், களவு,சூது, வாது, கொலை, சண்டை முதலாகிய தீக்குணமெல்லாம் பிறக்கும் போதே யுண்டாயின (எ-று). 58

சித்தெல்லாங் கற்றவருஞ் செய்யவல்ல நற்றவரு
முத்தமநால் வேதந்தேர்ந் துற்றவரு-மித்தரையிற்
றீமைவழிப் பெண்கள் செயுஞ்சூ தறியாரேல்
யாமறியப் போமோ வியம்பு.

(இ-ள்) சித்துவிளையாடக் கற்றவரும் தவஞ்செய்ய வல்லவரும், மேலாகிய நான்கு வேதங்களைத் தேர்ந்தவரும் இப்பூமியில் தீமையுள்ள பெண்களின் சூதைத்தெரிந்து கொள்ளாரென்றால் நம்மாலறிய முடியுமோ? (எ-று). 59

தேசு மழிந்தாலுஞ் செல்வ மொழிந்தாலும்
போக மிழந்தாலும் பூவுலகிற்-றோகைக்
கிணங்கிய சாய விருட்குழலார் தம்மை
வணங்கிப் பிழைக்காமல் வாழ்.

(இ-ள்) சரீரம் அழிந்தாலும், சம்பத்தொழிந்தாலும், சௌக்கியத்தை இழந்தாலும் மயில்போன்ற சாயலும் இருள்போன்றகூந்தலும் உடைய பெண்களை வணங்கிப் பிழைப்பதை விட்டு வாழ்வாய் (எ-று). 60

ஈசன் கயிலைமலை யெய்தினன் வைகுந்த
வாசன் கடலொளித்து வைகினன்-வாசமலர்

மேலவன்மே லேழுலக மேலவனு ளுன்புவியிற்
பாலவன்மா தர்க்குப் பயந்து.

(இ - ள்) இப்பூமியில் இளமையிலேயே கடினத்தை யுடைய பெண்களுக்குப் பயந்து ருத்திரன் கயிலைமலையையடைந்தான்; விஷ்ணு கடலில் ஒளித்துவாழ்கிருன்; பிரமன் ஏழுலகத்தின் மேலுலகமான சத்தியலோகத்தில் வசிக்கிருன் (எ-று). 61

தானிய நட்டந் தனநட்டந் தன்பிதுரார்
மானிய நட்டம் மனைநட்டம்-வாணிபத்திற்
பூரண நட்டம் பொருந்தவரு தற்கெல்லாங்
காரணங் கன்னியரே காண்.

(இ - ள்) தானிய நஷ்டம் தன நஷ்டம் தன் முன்னேரனுபவித்து வந்த மானிய நஷ்டம் மனை நஷ்டம் வியாபாரத்திற் பூரணமாகிய நஷ்டம் இன்னும் இவைபோன்ற நஷ்டங்கள் பொருந்த வுண்டாவதற் கெல்லாங் காரணம் பெண்களே (எ-று).

பெண்ணுசை யென்னுமொரு பேராசை பொன்னுசை
மண்ணுசை யைக்கூடி மாகர்புகழ்-விண்ணுசை
வேரறுத்துப் பேறுத்து வெற்றியறுத் துக்களிப்பின்
சீரறுத்து வைக்குமெனத் தேர்.

(இ - ள்) பெண்ணுசை யென்று சொல்லும் ஒரு பேராசையான து பொன்னுசை மண்ணுசை யென்ற இரண்டாசைகளையுஞ் சிநேகஞ் செய்துகொண்டு தேவர்கள் புகழும் மோக்ஷ லோகத்தின் ஆசையை வேரோடறுத்து, கீர்த்தி வெற்றி சந்தோஷ முதலாகிய வெல்லாம் அறுத்து வைக்குமெனத் தெரிவாய் (எ - று). 63

நெடுங்கோல் விழிப்பெண்க ணித்த முறைக்குஞ்
சுடுங்கோ லனையபல சொற்கள்-படுங்காற்
கொடுங்கோ லரசன் குடிகளைப் போல
நடுங்கோ விடுவார் நலிந்து.

(இ-ள்) நீண்ட அம்புபோன்ற கண்களையுடைய பெண்கள் நாடோறுந் தூஷிக்கும் அக்கினிக்கணை போன்ற வார்த்தைகள் வந்து காதிலேறுந் தோறும் ஆடவர், அநீதியை யுடைய அரசனது குடிகளைப் போல நடுங்கி நலிந்து ஓலமிடுவர்கள் எ-று.

கொடுஞ் சொற்கள் கூறிக் குடும்பத்தை மீறி
நடுங்கச்செய் கின்றவொரு நாரி-யொடுங்கா
வலியபுலி யென் குமத மாவினத்தை வாட்டி
நலியச்செய் கின்றசெந் நாய்.

(இ-ள்) கொடிய வார்த்தைகளாற் றூஷித்து ஒவ்வொரு குடும்பத்தையும் நடுங்கச்செய்கின்ற பெண்கள் ஒடுங்காதவலிமையுள்ள புலிகள்கரடிகள் மதயானைகள்முதலிய மிருகங்களைவாட்டி நடுங்கச் செய்கின்ற செந்நாய்களை யொப்பார்கள் (எ-று).

தூரநா டேகிச் சுகிப்பமெனத் தன்னினிய
சோரனோ டேகித் துணியிழந்து-நீரருகில்
நின்றாள் விடிந்து நெறியளாய்ப் போற்றமனை
சென்றா ளவட்கிணையார் செப்பு.

(இ-ள்) தூரதேசஞ் சென்று சுகிப்போமென்று தனக்கினிய சோரபுருஷனோடு இரவில்நடந்து ஒருநதிக்கரையில்தனது ஆடையை அச்சோரன் பறித்துக்கொண்டுபோக ஒரு நரியின் தந்திரத்தால்அம்மணமாயிருந்தஅவ்வியபிசாரி பொழுதுவிடிந்ததும் உத்தமியாய் வீடுவந்து சேர்ந்தாள்; அவளுக்கு நிகர் யார் (எ-று).

தொடைவைத் தழுதூட்டித் தோளிற் சுமந்து
புடைவைத்துக் காத்த புருடன்-படையுற்ற
போதுகிணற் றில்விழுத்திப் போய்முடவ னைச்சேர்ந்த
மாதுகுணந் தானென் வழுத்து.

(இ-ள்) தொடைமீது வைத்துச் சோறூட்டிப் பெட்டியிலிட்டுச் சுமந்து பக்கத்தில் வைத்துக் காப்பாற்றிய கணவன்கண் வளர்ந்த வுடன் அவனைக் கிணற்றி லெறிந்து சென்று முடவனைச்சேர்ந்த பெண்ணின் குணத்தை வழுத்துக் கடவாய் (எ-று).

வெம்புவாள் பொய்யேமேல் வீழ்ந்தழுவாள் பொய்யே
னம்பிவிட்டே னென்பா ணவிபொய்யே தம்பலமுங்[யா
தின்பேனென் பாள்பொய்யே செத்தாலுடன் சாவே
னென்பா ளதுவும்பொய் யே.

(இ - ள்) பிணங்குவதும் மேல் வீழ்ந்தழுவதும் உம்மை நம்பி விட்டேனென்பதும் உமது வாய்த்தம்பலத்தையும் உண்பேனென்பதும் நீரிறந்தால் யானுமுடனே யிறப்பே னென்பதும் ஆகிய பசப்புகள் வேசிகளைப் போல ஏனைய பெண்களிடத்தினு முண்டு (எ - று). 68

தேட்கு விடங்கொடுக்கிற் சீறுமொரு வெம்பணிக்கு
மீட்க வரியவிட மேவுபல்லிற்-கேட்குங்கால்
தேனீ தனக்குவிடஞ் சென்னியிற் கன்னியர்க்கு
மேனி முழுதும் விடம்.

(இ - ள்) தேளுக்குக் கொடுக்கில் விஷம் பாம்புக்குப் பல்லில் விஷம் தேனீக்குத் தலையில் விஷம் பெண்களுக்குச் சரீர முழுதும் விஷம் (எ - று). 69

சூதாடி பொய்யுந் துணைமுலைவிற் பாள்பொய்யும்
வாதாடிக் கச்சேரி வந்தபொய்யுந்-தீதான
கள்ள வழிப்புணர்ச்சிக் காரிகையார் தம்பொய்க்கோ
ரெள்ளளவு மாகா விணை.

(இ - ள்) சூதாடுவோர் பொய்யும் விலைமாதர்கள் பொய்யும் கச்சேரியில் வழக்காடுவோர் பொய்யும் விபசாரிகள் பொய்க்கு எள்ளள வேனும் நிகராகா (எ - று). 70

பள்ளிக்கூடத்துப் பயல்கள் சொலுஞ்சாக்குங்
கள்ளத் தடிமை கடுஞ்சாக்கு-மெள்ளுற்ற
போக்கிரிப் பெண்கள் புருடர் தமக்குரைக்குஞ்
சாக்கினுக் காமோ சரி.

(இ - ள்) பள்ளிச்சாலையில் பிள்ளைகள் உவாத்தியாயரை யேமாற்றுவதும் திருட்டுத்தனமுடைய அடிமைகள் தங்களெஜ

மானை யேமாற்றுவதும் ஆகிய ஏமாற்றல்கள் இகழ்ச்சியுற்ற விபசாரிகள் புருஷனை ஏமாற்றுவதற்குச் சற்றும் நிகராகுமோ (எ - று). 71

கிழவன்பா லென்னைக் கிடக்கக் கொடுத்தார்
அழகிலாற் குன்னை யளித்தார்-பழவினையென்
றோதுவார் கெட்டது நம் முற்றூழா லின்னவர்க்கிங்
கேதுவாழ் வென்றா ளிகழ்ந்து.

(இ - ள்) வயோதிகனுக்கு என்னைத் தத்தஞ் செய்தார்கள், அழகில்லானுக்கு உன்னைத் தத்தஞ்செய்தார்கள்; கேட்டால் உங்கள் தலைவிதியென்கிறார்கள்; நமது பழக்கமே கெடுத்ததன்றி வேறல்ல; அவர்களும் நம்போற் கெடாமலிருப்பரோவென்று ஒரு பெண் சொன்னாள், (எ - று). 72

என்சோர நாதாகே ளென்கணவ னம்மிருவர்
வன்சோரந் தேர்ந்து மனஞ்சோரப்-பின்சோரா
துன்றன் றலையெழுத்தை யோர்பெண் ணழிப்பதெவ்வா
றென்றேன்சென் றான்மகிழ்ந் தேற்று.

(இ - ள்) எனது சோரநாதா! நம்மிருவர்க்குமுள்ள சம்பந்தத்தை எனது கணவன் எவ்வாறோ தெரிந்துகொண்டு மனஞ் சோர்ந்திருப்பதை யான் குறிப்பாலறிந்துகொண்டு அஞ்சாமல் உமது தலையெழுத்தை ஒரு பெண்ணானவள் எவ்வாறழிக்க முடியும் என்றேன். அது கேட்டு மகிழ்ந்து சென்றான். இனி யாது பயம் என்றாள் (எ - று). 73

கள்ளப் புணர்ச்சிதனைக் கண்டகிழ மாமனார்
எள்ளிக்கா லாழிகொண் டேகப்பின்-மெள்ளவழைத்
தாளனையங் கேகூடி யாழிகொண்டா னுன்பிதா
கேளெனச்சூழ்ந் தாளவற்குக் கேடு.

(இ - ள்) தானொரு சோரன்பால் சுகத்தை யனுபவிக்கும் இரவில் தனது கிழமாமனார் அங்கு வந்து இதை வெளியிடக் காலிலுள்ள மோதிரத்தைக் கழற்றிப்போய் நித்திரை செய்து

11|9|02

விட்டான். இன்பமுற்றியதும் சோரனை யனுப்பிவிட்டுப் புருஷனை யழைத்து வந்து அங்குச் சுகித்து உடனே யெழுந்து உனது கிழத்தந்தை என் காலாழியைக் கழற்றிப்போனுனென்று கூறி மாமனுரைத் தண்டிப்பித்தாள். ஆதலால் பெண்களைச் செயிக்கமுடியாது (எ - று). 74

தலைவன் மொழிபைத் தடுத்தெதிர் நின்று
பலவன் மொழியாடும் பாவை-குலவஞ்சி
யல்லாமை தேர்ந்துமவ ளாசையகற் றித்துறவிற்
செல்லாமை கொண்டதென் செப்பு.

(இ - ள்) தனது நாயகன் வார்த்தையைத் தடுத்து எதிர் நின்று பல கொடுஞ் சொற்களைப் பிதற்றுகிற பெண்ணைக் குலஸ்திரீயல்லவென்று தெரிந்தும் அவளாசையை யொழித்துத் துறவுநெறியிற் செல்லாது வீட்டிலிருப்பதேன் (எ - று). 75

பதியைப் பழிப்பாள் பயந்ததன் றந்தை
மதியைப் பழிப்பாள் வரைந்த-விதியைப்
பழிப்பாள் குடும்பப் பணிசெய்யாள் காலங்
கழிப்பா ளிதுவோ கனம்.

(இ - ள்) நாயகனைப் பழிப்பாள். பெற்றுவளர்த்த தனது தந்தையைப் பழிப்பாள். விதியெழுதிய பிரமனைப் பழிப்பாள். வீட்டு வேலைகளைச் செய்யாமல் காலத்தைக் கழிப்பாள். இதுவோ பெண்கட்குப் பெருமை (எ - று). 76

கள்ளக் கணிகையோ கண்டவரைக் காதலிக்கு
முள்ளத் தவளோவென் றூரையங்-கொள்ள
நடைகுலுக்கிச் செல்கின்ற நாரிதனைப் போல்வார்
உடைவிலக்கிச் செல்வ தயர்வு.

(இ - ள்) பணம் பறிக்குந் தேவடியாளோ கண்டவரை யிச்சிக்கின்ற கருத்துடையவளோவென்று ஊரிலுள்ள பலருஞ் சந்தேகிக்க நடைகுலுக்கி நடக்கின்ற நாணமில்லாப்பெண்கள் உடைவிலக்கி அம்மணமாகச் சென்றால் அது உத்தமம், (எ-று).

அங்காடி கொள்ளப்போ யங்குமிங் குந்திரிவா
ளெங்கேயெ மாறிடுமென் றேறிடுவாள்-சங்கை
யுறுமாறு சஞ்சரிப்பா ளுத்தமியென் றோர்பேர்
பெறுமா றிவளென்றே பேசு.

(இ - ள்) கடைவீதியிற் சில பண்டங்கள் வாங்கச் சென்று கடைதோறுஞ் சென்று சென்று யார் ஏமாறுவாரென்று பார்த்துப் பார்த்துச் சந்தேகங்கொள்ளச் சஞ்சரிக்கும் வஞ்சியர் நல்லபேரெடுப்பதெக்காலமோ? (எ - று). 78

சோரப்பெண் ணில்லத்தைச் சோதித் திடிற்கதவி
னோரத் தொருவ னுபர்பரணை-சேரொருவன்
பானைக் கொருவன் பதுங்கியுறக் காண்டுமே
பூனைக் குலங்களே போல்.

(இ - ள்) சோர ஸ்திரீயினுடைய வீட்டைச் சோதித்துப் பார்த்தால் கதவின்மறைவிலொருவனும் பரணையின்மேல் ஒருவனும் ஒவ்வொரு பானைக்கும் ஒவ்வொருவனுமாக அநேகர் பூனைகளைப்போலப் பதுங்கியிருப்பர்கள் (எ - று). 79

சாரும் பகற்காலஞ் சாமத்தி னுக்கொருவ
னாருமிர விற்கடிகைக் கொவ்வொருவன்-சேருவது
முப்பத்து நால்வர் முனைந்தென்று விக்கள்ளிக்
கொப்பெடுத் தோதற்குண் டோ.

(இ - ள்) பகற்காலத்தில் சாமத்துக்கு ஒவ்வொருவனும் இராக்காலத்தில் நாழிகைக் கொவ்வொருவனுமாக முப்பத்து நான்குபேர் முனைந்து ஒரு கள்ளப்பெண்ணைக் கலப்பதென்றால் இவளுக்கு நிகர்சொல்ல முடியுமோ? (எ - று). ௮0

இன்பத்தை நீநுகர வென்னைமணஞ் செய்திட்டாய்
துன்பத்தை யானுகரத் தோன்றினே-னின்பக்க
வீட்டாரப் பெண்கட்கு வேண்டும் பணிசெய்து
போட்டாரென் றுளதன்றோ பொற்பு.

(இ - ள்) எனது சரீர சுகத்தையும் மற்றச் சுகத்தையும் அனுபவிக்க என்னைக் கல்யாணஞ் செய்துகொண்டாய்; நானோ துன்பமனைத்தையும் அனுபவிக்க வுனக்குப் பெண்சாதியாகி னேன்; நினது பக்கத்து வீட்டார் அவ்வீட்டுப் பெண்களுக்குப் போதுமான நகைகளைச் செய்து தரித்திருக்கிறார்கள்; அது வன்றோ அழகென்றாள். ஆதலால் பெண்கட்கு இவ்வாறு பொறுமை கொள்வதே அழகு (எ - று). 81

பாவிய வாயிற் படியின் முறத்தில்
உரலி னுலக்கையி னுட்கார்ந்-திரசமொழி
பேசி யிருப்பாரப் பெண்கள்வீட் டிற்கமலை
வாசமிரா ளென்றே வழுத்து.

(இ - ள்) வாசற்படி முறம் உரல் உலக்கை முதலானவற் றை ஆசனமாகக்கொண் டுட்கார்ந்து பேசியிருக்கும் பெண்கள் வீட்டில் இலக்ஷ்மி வாசம் செய்யாள் (எ - று). 82

சோற்றுக்குங் கட்டத் துணிக்குமலால் யான்வேறு
நோற்றுக்கும் பிட்டிலனோ னேக்குங்கான்-மாற்றரிய
நோயாளிக் கென்னை நுழைத்ததே தெய்வமெனும்
வாயாடிக் கென்னே வழி.

(இ - ள்) உண்ணச் சோற்றுக்கும் உடுக்கத் துணிக்குமல் லாமல் வேறொன்றுக்கும் நோன்பிருந்து உன்னை யான் கும் பிட்டதில்லையா? தெய்வமே! என்னை நோயாளிக்குவாழ்க்கைப் படச் செய்தாயே யென்று நொந்துகொள்கிற பெண்களுக்கு எவ்விதம் நல்லுலகங் கிடைக்கும் (எ - று). 83

அகமுடையான் றன்னை யடாவென்று பேசி
யகமுடையச் செய்தன் பழிக்கும்-அகமுடையாட்
கேழைமனை வீழும்வகை பேதநினை வாரணுகி
வீழுநர கேழுமுறை வீடு.

(இ - ள்) புருஷனை மரியாதையில்லாமல் அடாவென்று பேசி அவன் மனமழியச் செய்து அன்பையும் அழித்துக்கொள்

கின்ற பாதகிக்கு, ஏழையான குடியை அனாத்தஞ் செய்ய நினைக்கின்ற பாவிகள் போய் வீழும் பாழ் நரகங்களை முறையே வாழும் வீடுகள் (எ - று). 84

விடியத் துயினீத்து வீட்டுப் பணிசெய்
தடிசிலட் டுண்ணவிடா தந்தோ-மடியுற்ற
மூதேவி கட்காயுண் முன்னு துயிர்பறிக்கத்
தூதேவி னேமா சுகம்.

(இ - ள்) பொழுது விடியுமுன் நித்திரை தெளிந்து வீட்டிலுள்ள காலவேலைகளைச் செய்து சாதங் கறி முதலிய சமைத்துப் புருஷன் முதலிய பேர்க்குக் காலமறிந்து புசிக்கவிடாத தடிப்பெண்கள் பிராணன் அழியுச் சிலநாளிருந்தாலும் அதை நோக்காது அந்தகனே! தூதரைச் செலுத்தி அம்மாதரைக் கொல்வது சுகம் (எ - று). 85

அஞ்சொ லருங்கணவ னாயுள் விருத்தியுற
மஞ்ச ணிதமணியா மாதரெலாம்-மிஞ்சப்
பாப்பு நிழற்காய் பழமிவற்றை நல்கு
மரத்தைக் குறைத்துவரும் வாள்.

(இ - ள்) கணவனுடைய ஆயுள் விருத்தியடைய நித்தமுங் குளித்து மஞ்சளணிந்துகொள்ளாத பெண்கள் அதிக நிழலையுங் காய் கனிகளையும் உதவிவரும் மரத்தை நாடோறுஞ் சிறிது சிறிதாகக் குறைத்துவரும் வாள்போல்வார் (எ - று). 86

தாருவின்மேல் கொண்கன் றனையேற்றிச் சோரனொடு
சேர விகழ்ந்திழிபச் செல்லவிட்டத்-தாருவிலே
தானேறிப் பார்த்துத் தகாவினைசெய் தாபெண்ணோர்
மானுத் தமியாளுள் வைது.

(இ - ள்) தனது புருஷனைக் காட்டிலோர் மரத்திலேறச் செய்து வேறொரு மரத்திலொளித்து வைத்திருந்த சோரபுருஷனை யழைத்துச் சேர்ந்து சுகிப்பதைக் கண்ட புருஷன் கோபத்தால் தூஷித்து மரத்தைவிட் டிறங்கிவர அவன் ஓருவதற்

குள் சோரபுருஷனை அனுப்பிவிட்டு நானொன்றும் அறியேன், பொய்பேசுகின்றீர், எதோ பார்ப்போமென்று தான் அம்மரமே றிப்பார்த்து ஆணும் ஆணும் புணர்வதைக் கேட்டதுமில்லையே இதோ கண்டேனேயென்று கணவனைக் காறியுமிழ்ந்து வைது கிழ்வந்து இம்மரத்தில் பேயிருக்கிறதென்று சொல்லி யுத்தமி யாய் வீடுவந்து சேர்ந்தாள் (எ - று). 87

காரியத்திற் கண்ணுங் கருத்துமுள தக்கோரில்
வீரியத்திற் பேரெடுத்த மிக்கோரிற்-பாரிடத்தே
பெண்களால் வல்லோர்க்கு மெண்ணிச் சொலற்கடங்
பெண்களா லேமாந்த பேர். [கார்

(இ - ள்) தொழில் செய்வதில் கண்ணுங் கருத்துமா யுள்ள தக்கோரிலும் வீரரென்று பெருமைகொண்ட மிக்கோரி லும் பூமியின்கண் பெண்களால் ஏமாந்து போனவர்கள் இத் தொகையினரென்று கணித சாஸ்திர வல்லமையுள்ளோர்க்கும் எண்ணிச் சொல்ல ஒரு கணக்கினுமடங்கார்கள் (எ - று). 88

வீணு யுடைந்தசட்டி வேண்டியதுண் டென்றலையிற்
பூணாரம் பூண்ட புதுமைதனைக்-காணேன்யா
ணுதலினென் னில்லாணல் லாளென்றன் பற்குரைத்துக்
காதலிபா லுற்றான் கலந்து.

(இ - ள்) தோழனே! பயனின்றி யுடைந்துபோன சட்டி கள் என் வீட்டில் அநேகம் உண்டு; இருந்தாலும் உன் வீட்டில் கலவடையாகிய பூணாரம் பூண்டுகொண்ட புதுமையை என் வீட்டில் ஒருநாளுங் கண்டதில்லை ஆதலால் என்மனைவியே உன் மனைவியிலும் உத்தமியென்று கூறி வீடுவந்து சேர்ந் தான் (எ - று). 89

புண்ணியஞ்செய் போதச்சம் போந்தவிருந் தாலச்சீ
நண்ணியவை சென்று னனியச்ச-முண்ணிலவு
கண்பாழைத் தாலச்ச நாளுப்பா ரச்சமே
பெண்கள் வழியொழுகுப் பேர்க்கு.

(இ-ள்.) பெண்கள் மொழிவழி நடக்கும் புருடர்களுக்குப் புண்ணியஞ் செய்யுங்கா லச்சம்; விருந்தாளிகளைக் கண்டா லச்சம்; மனம் விரும்பிய சிநேகர் எங்கேனும் செல்வதற்கு அழைத்தால் அச்சம்; இவ்வாறு எப்பொழுதும் அச்சமே குடியா யிருக்கும் (எ-று). 90

உண்ணுங்காற் றுன்ப முறங்குங்காற் றுன்பமொன்
றெண்ணுங்காற் றுன்ப மிரவலோர்-நண்ணுங்காற்
செப்பரிய துன்பந் தினந்துன்ப மேபெண்கட்
கெப்பணியுஞ் செய்வா ரிடத்து.

(இ-ள்) பெண்களுக்கு எந்தப் பணிவிடையுஞ் செய்வோரிடத்தில் உண்ணும்போதுந் துன்பம், உறங்கும்போதுந் துன்பம், ஒன்றையெண்ணும்போதுந் துன்பம், யாசகர் நண்ணும்போதுந் துன்பம், இப்படி நாடோறுந் துன்பமே குடிகொண்டிருக்கும் (எ-று). 91

கொழுநன் வரவைக் குறியாமற் கண்ட
வழியிற் செலவுசெயு மாதை-மொழியிற்
படுக்கு மிரவும் பகலு மிடுக்கண்
கொடுக்குங் கடனென்று கொள்.

(இ-ள்) நாயகன் சம்பாதிக்கும் அளவு தெரிந்து செலவிடாமல் அதிகஞ் செலவிடுகின்ற பெண்ணைப்பற்றிப் பேசுங்கால் படுத்து நித்திரை செய்யும் இரவிலும் பகலிலும் ஓயாம லெண்ணவிடுதற் கேதுவாகிய பெருங்கடன் வேறேவேண்டாமென மதிப்பாய் (எ-று). 92

சேலையிலை கச்சிலைபூச் செண்டிலைநற் கல்லிழைத்த
வோலையிலை கைவளைக ளொன்றுமிலை-கோலமணி
மாலையிலை யென்றுசொலு மாற்றமலாற் பேசவொரு
வேலையிலை யின்னார்க்கு வேறு.

(இ-ள்) சேலையில்லையென்றும், ரவிக்கையில்லையென்றும், புட்பமாலை யில்லையென்றும், நல்ல கல்லிழைத்த கம்ம

லில்லையென்றும், கையில் வளையல்களொன்றுமில்லையென் றும், அழகிய ரத்தினமாலை யில்லையென்றும் சொல்லுவதேயன் றிப் பெண்களுக்குப் புருடன்பால் வார்த்தைபேசும் வேலை வேறில்லை (எ - று). 93

சொன்னாலுங் கேளார் சுயபுத் தியுமில்லார்
என்னாலுஞ் சந்தோட மெய்திடார்-எந்நாளும்
ஒன்றுரைக்க வொன்ப துரையா திரார்மாதர்
என்றுரைக்குந் தீயரிவர்.

(இ - ள்) பெண்களென்று கூறுந் தீமையுள்ள இவர்கள் தாங்கள் கொண்ட மூர்க்கத்தனத்தை விட்டுப் பெரியோர்கள் வார்த்தையுங் கேளார்கள், சுயபுத்தியினாலுந் தேறார்கள், மற்றெதனாலுஞ் சந்தோஷமடையார்கள்; ஒருவார்த்தை அதிகம் பேசிவிட்டால் நோய்கொண்டிருந்தாலும் அதற்கீடாக ஒன்பது வார்த்தை அதிகம் பேசாமலும் விடார்கள் (எ - று). 94

பாவியே யென்பாள் படைப்பேனோ சோறென்பாள்
தாவியிரு கைதரையிற் றாக்குவாள்-கூவித்
தெருவின்கண் வந்திடுவாள் தீர்வனுயி ரென்பாள்
புருடன் சிறிதடித்த போது.

(இ - ள்) நாயகி செய்த குற்றத்துக்காகச் சிறிது அடித்து விட்டால் அவள் புருடனை நோக்கி அடாபாவியே யென்பாள்; இனியுனக்குச் சோறு படைப்பேனோவென்பாள்; புருஷனை யடிப்பதற் கீடாக இரண்டு கையையும் ஓங்கித் தரைமீது தாக்குவாள்; ஓவென்றலறிக்கொண்டு தெருவுக்கு வந்துவிடுவாள்; பிராணனை மாற்றிக்கொள்வேனென்பாள்; இவ்வாறெல்லாம் ஆகாத்தியஞ் செய்வாள் (எ - று). 95

ஓரகத்தி மேல்புகுந்த வோரகத்தி தன்னைவே
றோரகத்தி போலெண்ணி யோரஞ்செய்-யோரகத்தி
சின்னாளில் வேறாகிச் சென்றுசென் றேற்பளே
பன்னாளுங் கண்குருடு பட்டு.

(இ - ள்) ஒருகுடியிற் றன்னைப்போலப்புகுந்த வோரகத்தி மாரை வேறு வீட்டுப் பெண்களைப் போல மதித்து வஞ்சனை செய்கின்ற ஒரு பாதகி சில தினத்தில் குடும்பம் வேறுபட்டுக் கஞ்சிக்கு வழியின்றிக் கண்கள் கெட்டு வீடுதோறும் தடவிக் கொண்டு சென்று பிச்சை யெடுப்பாள் (எ - று). 96

நாத்தியிவ ளென்குடியை நாத்திசெய வந்தாளென் [றே தூ
றாத்திரமாச் சொல்லவிரா மாத்திரம்போ-னேத்திரத்
வன்னிப் பொறிபறக்க வாய்ந்ததமர் போய்க்காண்போ
மென்னக் களித்துற்றா ரீண்டு.

(இ - ள்.) நாத்தியார் மீது வயிற்றெரிச்சல் கொண்டு என் குடியை நாஸ்தி செய்ய வந்தாளென்று ஒரு பெண் தூஷிக்க அதைக் கேட்டிருந்த அவள் ராமபாணம் போல அக்கினிப் பொறிகள் கண்ணிற் பறக்கப் புறப்பட்டு இருவர்க்கும் பெருஞ் சண்டை மூண்டதால் தெருச் சண்டை கண் குளிர்ச்சி யென்பதாகப் பெண்கள் கும்பு கூடினார்கள். (எ - று). 97

மானென்றுந் தோகை மயிலென்று மாதுரியத்
தேனென்றும் பேசித் திரிந்திடுவீர்-கானென்றும்
பேயென்றுந் தீய பிசாசென்றும் பெட்பில்லா
நாயென்றுஞ் சொல்வீர் நலம்.

(இ - ள்.) பெண்களை மான்களென்றும் கலாபமுள்ள மயில்களென்றும் மதுரமுள்ள தேனென்றும் அலங்கரித்துப் பேசித்திரியும் புலவர்களே ! சுடுகாட்டில் வாழும் பேய்களென்றும் பிசாசங்களென்றும் பெருமை யில்லாத நாய்களென்றுஞ் சொல்வீர்கள் ; நலமா யிருக்கும். (எ - று). 98

அக்கினியிற் பட்ட வருஞ்சருகென் கோவயிரச்
செக்கினிடைப் பட்ட திலமென்கோ-மிக்க
வலையினிடைப் பட்டதுரும் பாமென்கோ மாதர்
வலையினிடைப் பட்டோர் மனம்.

(இ - ள்.) பெண்களாகிய வலையிலகப்பட்டமாந்தாதுமனம் அக்கினியிலகப்பட்ட சருகென் பேனோ ? வயிரச்செக்கி லிட்ட எள்ளென் பேனோ ? மிகுந்த கடலி னலையி லகப்பட்ட துரும் பென்பேனோ ? பின்னையாது சொல்வேன். (எ - று). 99

தாலத்தீத சாதுக்கள் சங்கத்தை யெய்தாமற்
காலத்தை வீணைக் கழிப்பாரே-பாலத்தி
னண்பிலார்ந் திட்ட நயனமடப் பெண்களெனும்
பண்பிலார் வம்பிலே பட்டு.

(இ - ள்) ஆலகால விடம் போன்ற கண்கள் படைத்த பெண்களென்னும் புத்தியில்லாதவர் வம்பிலகப்பட்டுச் சாதுக் கள் சங்கத்தை யடையாமல் காலத்தை வீணே யெமனுக்குச் செலவிடுகிறார்கள் ; அந்தோ என்ன பாவம். (எ - று). 100

வந்தோ ரதிதி வயிறு பசித்திருக்க
வந்தோ வெனவிரங்கி யன்னமிடாள்-சந்தேக
முற்றிடவந் தாயென் றுலக்கைவலக் கைதனிலே
பற்றிடுவா ளெற்றிடுவாள் பார்.

(இ - ள்.) தனது முற்றத்தில் அதிதி யொருவர் வந்து எனது வயிறு பசிக்குது,அன்ன மிடுவா யம்மணியென்று கேட் டவுடன் அன்னங்கொடாமல் கன்னமிட வந்தவனைப்போ லிரு க்குது என்று கூறி யுலக்கையை வலக்கையிற் பிடித்து அடிக்க வந்தாள்; ஆதலால் பெண்கட்குத் தராதரந் தெரியாது. (எ - று).

தானுமிடாளிடுவார் தம்மனையுங் காட்டிடா
ளேனிவ்வே டங்கொண்ட தென்றிடுவாண்-மான
மிலையா வுனக்கென்பா ளேகிற் சிரிப்பாள்
நிலையா விவட்கிந் நிதி.

(இ - ள்-) தானும் பிச்சையிடாமல் இடுவார் வீட்டையுங் காட்டாமல் ஐயா இக்கோலங்கொண்ட தென்று கேட்க, சந் நியாசி தலைவிதி யென்று கூற,என்ன வுனக்கு மானமில்லையா? எற்பதிகழ்ச்சி யென்பதைப் படிக்கவில்லையா ? சம்ஸாரத்தைத்

தாங்கத் திராணியில்லையா? வென்று நீதிகூற,வுடனே சந்நியாசி எழுந்து முன்னே போகப் பின்னே யிருந்து வாயாரச் சிரித்தாள்; ஆதலால் இசெல்வச் செருக்கு பெண்களுக்கு நிலையாது. (எ - று). 102

நீரனுப்ப வந்த நெறியில்லா னிங்குற்ற
வாருலக்கை தன்னை வழங்கென்று-னிற்
புருடனளிப் பாரென்றேன் போய்விட்டா னென்றான்
கருதியெடுத் தோடுகிறான் காண்.

(இ - ள்.) தாங்களனுப்பிய துன்மார்க்கன் இவ்வுலக்கையைப் பார்த்து நன்றாயிருக்குதுகொடுவென்று கேட்டான்; என் நாயகர் வரட்டுங் கொடுப்பாரென்று சொல்லு முன் உன் கிரகத்தில் கை நனைக்க மாட்டேன்என்று கோபித்துக்கொண்டு இதோ போகிறான் என்று சொன்ன பெண்சாதி வார்த்தையை மெய்யென்று நம்பி உலக்கையை யெடுத்துக்கொண்டு சுவாமி! இந்தாருமென்று பின்றொடர அவள் சொன்ன வுலக்கைப் பூசை நேரப்போகு தென்று புறங்காலடி புட்டத்திற்பட வோடினார்; ஆதலால் பெண்கள் எவ்விதத்திலும் ஏமாற்றி விடுவார்கள். ()

மாகத்தை வில்லாய் வளைக்கலா மாகத்து
மேகத்தை வீடாக்கி மேவலாஞ்-சாகத்தை
நன்றாய்க் கடைந்துவெண்ணெய் நல்கலா மாதர்குண
மொன்றே திருப்பொணா தோர்.

(இ - ள்) ஆகாயத்தை வில்லாக வளைக்கலாம்; மேகத்தை வீடாக்கிக் குடியிருக்கலாம்; கீரையைக் கடைந்து வெண்ணெயெடுக்கலாம்; பெண்கள் குணத்தை மாத்திரந் திருப்பமுடியாது.

வாழைக்குத் தன்காயே வன்கூற்று மன்னுசவைக்
கோழைக்குத் தன்படிப்பே கூற்றாமோர்-பாழைக்குத்
தொண்டரே கூற்றாந் தொகுத்தமண வாளர்க்குப்
பெண்டிரே கூற்றாம் பெரிது.

(இ - ள்) வாழை மரத்திற்குத் தானீன்ற காய்களே யெமனும்; சபைக் கோழைகட்குத் தங்கள் படிப்பே யெமனும் ; ஒரு பாழான அதிகாரிக்கு அவன் வேலையாட்களே யெமனும்;பெண் சாதியே புருடனுக்கு எமனும். (எ - று). 105

ஆயிழையார் தங்கட் கரிவையெனப் பேரொன்று
மேயவிதந் தன்னை விளம்புகேன்-றீயிதுநீ
யேசென்ப தன்றி யிமையிலோர் வேறுபொருள்
பேசென்ப தாகும் பிழை.

(இ - ள்) பெண்களுக்கு அரிவை யென்ற பேர்வந்த காரணம் யாதாமெனில் அரியென்றும் வையென்றும் பிரித்து நெருப்பென்றும் தூஷிப்பா யென்றும் பொருள் கொள்ளாமல் வேறு பொருள் கொள்வது குற்ற முடைத்து. (எ - று). 106

கடற்குக் கரையில்லை காற்றுக்கோய் வில்லை
யுடற்குநிலை யில்லை யுலகிற்-சுடர்க்குரிய
தேவர்க் கிருளில்லை சீலர்க் கிடரில்லை
பாவையர்க்குப் பண்பில்லை பார்.

(இ - ள்) கடலுக்குக் கரையில்லை; காற்றுக்கு ஒரு போதும் ஓய்வில்லை ; சரீரத்துக்கு நிலையில்லை ; சோம சூரியாக்கினி என்னும் மூன்று தேவர்கட்கு இருளில்லை; மெய்ஞ்ஞானிகட்குத் துன்பமில்லை ; பெண்கட்கு நல்ல புத்தியில்லை. (எ - று). 107

நேரிற் பகைவர் நெருங்கிவரக் கண்டவுடன்
காரி யுமிழ்ந்துசெலுங் கத்தபநேர்-நாரி
யிலங்காடை நாண மியைந்தன் றுலகுக்
கலங்கார மாகவனைந் தாள்.

(இ - ள்.) யாராகிலுந் தனக்குப் பகையானவர் நெருங்கி நேரில் வரக்கண்டதும் காரிக்காரி யெச்சிலையுமிழ்ந்து செல்லுகின்ற வெட்கங் கெட்ட வேசரி போன்ற பெண்கள் உலகத்துக்கு அலங்காரமாகச் சேலையுடுத்ததே யன்றி நாணம் பற்றி யுடுத்த தல்ல, (எ - று). 108

விருப்பைத் தருவது வேசியர் மிக்க
செருக்கைத் தருவது செல்வம்-பெருத்த
மணியைத் தருவது மாநாகம் பாவப்
பிணியைத் தருவது பெண்.

(இ - ள்) ஆசையை விளைப்பவர் வேசையர்; மிகுந்த செருக்கை விளைப்பது அற்ப செல்வம்; ஒளியாற் பெரியரத்தினங்களை விளைப்பது உத்தம நாகங்கள்; பாவ முதலாகிய பிணிகளை விளைப்பவர் பெண்கள். (எ - று). 109

கோபம் புரிவது கோறல் வினையாதி
பாபம் புரிவது பாழ்நிரயந்-தீபம்
புரிவது சோதி புவியின் மடவார்
புரிவது சஞ்சலமே போந்து.

(இ - ள்) கோபமானது சண்டையை மூட்டும்; கொலை முதலிய பாபங்கள் நரகத்திற் கூட்டும்; தீபங்கள் சோதியைக் காட்டும்; பெண்களின் கெட்ட செயல்கள் புருடரை வாட்டும்.()

ஏற்பதற் கஞ்சா ரிழிவுடையா ரெஞ்ஞான்று
நோற்பதற் கஞ்சார்மெய்ந் நான்முனிவர்-காப்பதற்
கஞ்சார்கா ராள ரழிப்பதற் கஞ்சார்நீண்
மஞ்சார் குழன்மங்கை மார்.

(இ - ள்) இழிவை நோக்காதவர் ஏற்பதற்குப் பின் வாங்கார்; உண்மை நூலுணர்ந்த முனிவர்கள் நோற்பதற்குப் பின் வாங்கார்; வேளாண்மை செய்வோர் ஒருவரைக்காப்பதற்குப் பின் வாங்கார்; பெண்கள் ஒருயிரை மாய்ப்பதற்குப் பின் வாங்கார். ()

நாவிற்றீண் டிச்செறினு நல்லபாம் பென்பார்நோ
யேவிடினு நல்லவெல்ல மென்பாரால்-பூவிறகுப்
பொல்லாரே யாயிடினும் போதமிலா மாதரையு
நல்லாரே யென்பார் நயந்து.

(இ - ள்) தனது நாவாற்றீணடிக் கடித்துக் கொல்லும் நாகத்தையும் நல்ல பாம்பென்பார்கள் ; தின்றவுடன் நோய்களை செய்யும்வெல்லத்தையும் நல்ல வெல்ல மென்பார்கள்; அதுபோல பூமியின் கண் கெட்ட செய்கையுடைய பெண்களுக்கும் நல்லாரென்று பெரியோர்கள் பேரிட்டார்கள், (எ - று). 112

பழங்கலய மேற்கைகொள் பாத்திரங்கண் மேற்றங்
குழந்தைகளின் மேல்வாரு கோன்மேற்-றழைந்த
முறத்தின்மேற் காட்டுவர்தம் மூண்டசினந் தன்னைச்
சிறப்பில்லா மாதர் தினம்.

(இ - ள்) சிறப்பகன்ற பெண்கள்தங்களுள்ளத்தில் மூண்ட கோபத்தைப் பழம் பானைகளிலும் கைகொண்ட பாத்திரங்களிலும் தமது குழந்தைகளின் மேலும் துடைப்பத்திலும் முறத்திலுங் காட்டி விடுவார்கள். (எ - று). 113

கானத் தனியயிற்குக் கார்கண்டாற் கொண்டாட்டங்
கூனற்குக்கோல்கண்டாற் கொண்டாட்டந்-தீனர்க்கோர்
அண்டைகண்டாற் கொண்டாட்ட மப்புவியின் மாதர்க்
சண்டைகண்டாற் கொண்டாட்டந் தான். [குச்

(இ - ள்) கானகத்திலுள்ள மயில்களுக்கு மேகத்தைக் கண்டாற் கொண்டாட்டம்; கூனனுக்குக் கோலைக்கண்டாற் கொண்டாட்டம்; யாசிப்பவனுக்குக் கொடுத்துக் காக்கும் வள்ளலைக்கண்டாற் கொண்டாட்டம்; பெண்டுகளுக்குச் சண்டையைக் கண்டாற் கொண்டாட்டம், (எ - று). 114

காகத்துக் கேது காவின்மை காளவிட
நாகத்துக் கேது நலஞ்செய்கை-தாகத்தைச்
செய்யலரிக் கேதுகுளிர் தீயகுண மேயமனத்
தையலருக் கேது தயை.

(இ - ள்) காகங்களுக்குக் கள்ள மின்மையும், கறுத்த விடத்தையுடைய நாகங்களுக்கு நன்றி யறிதலும், சூரியனுக்குக்குளிர்ச்சியும்; தீக்குண மூற்ற பெண்கட்குத் தயவும் ஏது? (எ - று)

வானஞ் சரியாக வானஞ் சொரியாம
லீனம் புரிகின்ற தென்னென்றல்-பானந்தக்
காரணஞ்சொல் வேனுலகிற் சற்பின் மகத்துவஞ்சே
ராரணங்கண் ணாரின்மை யால்.

(இ - ள்.) ஆகாயத்திலுள்ள மேகங்கள் உலகத்தில் மாத மும்மாரி பொழியாமல் உலோபரைப்போல வருடத்துக் கொரு மழையும் பொழியா; கற்புமகத்துவமுடைய தெய்வத்தன்மை வாய்ந்த பெண்களில்லாமையே காரணம் (எ - று). 116

மாலை தொடுப்பர் மடத்தில்வா ழாண்டிகணன்
னூலைத் தொடுப்பர்மெய்ந் நூற்புலவர்-காலொத்த
அம்பு தொடுப்ப ரடல்வீரர் வீணான
வம்பு தொடுப்பா மடவார்.

(இ - ள்.) மாலைகோப்பவர்கள் ஆண்டிகள்; நூலைக்கோப்ப வர்கள் வித்துவான்கள்; அம்பைக் கோப்பவர்கள் வீரர்கள்; வம் பைக் கோப்பவர்கள் மாதர்கள் (எ - று). 117

தன்குறையைக்கேட்பவர்பாற்சண்டைவரக்கோப்பவர்பா
லென்குறையைக் கேளென் றியம்புவர்பாற்-றுன்புறனீ
யந்தோவென் றாற்றுவர்பா லல்லா தரிவையர்கள்
சந்தோட மெய்திடார் சற்றும்.

(இ - ள்.) தனது குறைகளைக் கேட்பவரிடத்தும், சண் டைக்குக் காரணமாகிய கோள்களை வந்துரைப்பாரிடத்தும், எனது குறைகளைக் கேளென்று எதிரில் வந்து குந்தியவரிடத் தும், ஐயோ நீ துன்பமடையாதே சீக்கிரத்தில் உன் சத்துருக் கள் அழிந்துபோவா ரென்பவரிடத்தும் அல்லாமல் பெண்கள் மற்றெவ்விடத்துஞ் சிறிதுஞ் சந்தோடங் கொள்ளார் (எ- று).

கற்றவா னாலுங் கனசூ ரானாலுங்
கொற்றவா னாலுங் குவலயத்தின்-மற்றெவர்தாம்

ஆனாலும் பெற்றபே ராரா யினுமுண்டோ
மானார் விழியார் மதிப்பு.

(இ - ள்.) வித்துவான்களானாலும், பெருத்த சூரர்களானாலும், அரசர்களானாலும், இத்தரணியில் மற்றைய யாவர்களானாலும் பெண்கள் மதிப்பைப்பெற்ற புருடர்கள் யாராவது உண்டோ? இல்லை (எ - று). 119

ஆராயினு முண்டோ என்பதற்கு ஆராய்ந்து பார்த்தாலும் உண்டோ வென்பது மற்றொரு பொருள்.

நாய்போற் குரைத்து நலந்தெரியா நாரியரைப்
பேய்போற் கருதும் பெரியோரைத் - தாய்போ
லடியாரைக் காத்திடுநல் லாண்டவனி லெண்ணிப்
படியாரும் போற்றுவதைப் பார்.

(இ - ள்.) வித்தியாசமின்றி எவரிடத்தும் நாயினம் போன்று குரைத்துப் பேசும் சுபாவீகத்தன்மை வாய்ந்த இல்லறப் பாங்குணராத பெண்களைப் பெரியோர், பேயினத்துள்வைத்தெண்ணி யொதுங்கிப்போவர்; அத்தகை அறிவாளரை உலகம், தாய்போன்றிருந்து அடியவரை யாதரித்து வரும் கடவுளாக மதித்து வணங்குவதைப் பார்ப்பாயாக. இதனால் மாதர்களின் அநீதிகளை வெளிப்படுத்துவதின் ஏற்றம் பெறப்படுதல் காண்க. (எ - று). 120

வாழி.

மாநிலம் வாழ்க மறையோர் மறைவாழ்க
ஆனினம் வாழ்க அறம்வாழ்க - தேனிருங்
கூந்தற் பதிவிரதக் கோதைமார் வாழ்கநல்
வேந்தர்கோல் வாழ்க மிளிர்ந்து.

மாதர் அநீதி - மூலமும் உரையும்

முற்றிற்று.

இந்நூலாசிரியர் பாடிய

தனிச்செய்யுள்கள்.

சித்திரைவை காசிலா விடத்தோ யானி
செறிபாதோ யாடியா வணிகாத் தோணை
யத்திரமாக் கொண்டுபுரட் டாசிவெய்யோர்
அழிய × வற் பசிரிப்பாற் செய்தமுன்னைப்
சத்திரகார்த்திகையனுக்குத் தந்தாய் செய்ய
சடையினு மார்கழிதிங் களுமணிந்தோய்
நித்தியழ மன்பர்சிந்தை மாசி குத்து
நின்றேறுயென் * பங்குநீ நின்றுள் வாயே.

அவமேடம் பம்புரிவா * ரிடவஞ் சஞ்சேர்
ஆவமிதுநம் மிடமலவென் றகலும் பாதா
தவர்கடகஞ் சிங்கநனி தவஞ்செய் கன்னித்
தகையாளா வெழிலாது லாமி குந்த
சுவையாந ‡ விற்சிகவு ரியினோர் பாகா
தோன்றுதனு சுகம்வேண்டா மகர மாதி
யவிர்கும்ப முனிதமிழ்க் கழகு கண்ட
அறவாநின் பதமீநம் படிய னேற்கே.

ஞாயிறு கண்டுமங்காத் திங்கள் போன்முக நங்கைதன்
வாயிதழ் வேட்டு மதனம்பு தன்மிசை வந்துபட [செவ்
வேய விடிக்குரல் கேட்டவி யாழ மெனநடுங்கி
மேயவெள் ளிக்கிணை யாமதி போய்ச்சனி மேவினனே

அத்தினை யொழிக்கும் அரசெலாந் துதிக்கும்
ஆலநீர் விழியளைப் பழிக்கும்
இத்தலத் தெங்கு மிகுமதிப் பாக்கும்
இதயத்தி னுவலே தேக்கும்

× ஐப்பசி என்பது அற்பசி என இடநோக்கித்திரிந்தது.
* பங்குனி என்பதும் அவ்வாறே.
* ரிஷபம்.
‡ விருச்சிகம்;

மொய்த்தவெற் பனைய பகையையு முருக்கும்
மூரிவெங் கடவினைக் கடவும்
குத்திர வியமன் எட்டியும் பாரான்
குகன்கர வேலைநம் புறினே.

கொக்கின்கீ ழுள்ளானைக் குயிற்காகந் தந்தானைக்
      கோழி யேந்தும்
மிக்கவலி யனையருண்முத் தலைமேவு மயிலானை
      விரும்பு ருதார்
மெய்க்கழுகு பிணிமுதல விடுப்பானைப் பெருகருடன்
      மிக்குச் செய்த
தக்கவுதா ரியைநரையா னேறும்வெண்கா டையைநித
      சார்ந்து வாழ்வாம். [முஞ்

வினைசிங்க விளங்கருணை யானை வேங்கை
வெம்பணிமுன் னேயாடு வியன்பெம் மானை
யனைதங்கு திரையனைமா டுறக்கொண் டானை
மரைமுகவென் னாய்க்குரங்கு லவத்தந் தானைத்
தனைநம்பி யொட்டகஞ்சா ரமுயல் வானைத்
தருபூனை யச்செயும்வா னரிதீர்த் தானைக்
கனைகாடிக் கெணவுண்டின் பன்றிக் காணுக்
கயிலையா ளியைமனமே கருது வாயே.

பதினொன்றி னாற்பட்ட வையாறி னுக்கொன்றாட் பட்டவனே, பதினொன் றுடனொரு மூன்றில்வந் தானுக் குப் பத்தவனே, பதினொன்ற தான தனவிருமூன்றுன் பகையையெந்தப், பதினொன்றிலைந்து குறைந்தது வெல்லும் படிமிசையே.

நடைபெறு முதலெ ழுத்தில் லாவிடி னற்கடற்பே[பேர்
ரிடையெழுத் தில்லா விட்டா லெழில்பெறு மிஞ்சியின்
கடையெழுத் தில்லா விட்டாற் கடவுளின் பேரா மீது
திடமுடன் குறிக்கி லோர்நாள் சிறந்திடு நாள தாமே.

முதலெழுத் தில்லா விட்டான் மூக்கினைப் பிடிப்ப தொன்றும், அதனிரண் டாமெ ழுத்தில் லாவிடி னீர்மே

லோடும், துதைதரு மூன்றின்ருயிற் றூயவா னீர தா கும், சதிர்பெறு முதலு நான்குந் தலைமலர் யாது மாதே.

முன்னொரு மிருகத் தின்பேர் முதலெழுத் தில்லா விட்டால், நன்னலஞ் செறியும் வாரி நடுவெழுத் தில்லா விட்டால், கன்னியர்க் காமே சத்தங் கடையெழுத் தில் லா விட்டால், துன்னிப காவி னென்ருஞ் சொற்றிடா யின்ன தென்மே.

நாகத்தைப் பூண்டவனே நாகத்தைக் கீண்டவனே
நாகத்தை யாண்டவனே நற்கபிலை - நாகத்தை
வாசமாக் கொண்டவனே வல்வினையேன் செய்துதியை
நேசமாக் கொள்வாய் நிதம்.

அரிவா யரியும் அரிவா யரியும்
அரிவா யரியும்போ லானேன் - அரிவா
யரியை யெடுத்த அரியேந்தும் பாணி
யரியே யெனைபா தரி.

நாகமொன்றல்குல் நாகங்கழன்றதால்
நாகமொன்ருெரு நாகமுறைந்தது
நாகமொன்ருெரு நாகமறைந்தது
நாகமொன்றுமின் ருகமடந்தைக்கே.

அரிபிறப் பான தலையா னரிபிறப் பானவனை
அரிபிறப் பானெடுத் தேக விழிக்க ணரிபிறக்க
அரிபிறப் பானெ னரிபிறப் பாதி யரிபிறப்பை
அரிபிறக் கக்கொண் டரிபிறக் கச்சம ராடினனே.

அரியிடத் தோனை யரிவலத் தோனை யரியுருவாய்
அரியடர்த் தோனை யரியேறு வோனை யரிபுணவாம்
அரிநடத் தோனை யரிகுலத் தோனை யரியரியென்
றரியரி போற்று மரியோனைப் போற்றின் றரிவரவே.

நாகத்த ருகத் தனைத்துதிப் பார்க்கரு ணக்கனைக்கை
நாகத்த ருகத் தனைநாகத் தேய்தழ ருகத்தனை

நாகத்த னுகத் தனைநாகப் பூணனை நாயகனென்
னுகத்த னுகத் தனைத்தாய துன்பமு நண்ணுவனே.

ஐயா னனத்த னடியார்க் கருளை யளிக்கநின்ற
ஐயா னனத்த னறியாத செஞ்சடை யத்தனெங்கள்
ஐயா னனத்தந் தகர்த்தாற் கரியனருங்கொன்றைத்தார்
ஐயா னனத்தை பொறுக்கத் தானரு ளுசலத்தே

கரியானைக் காத்த கரியானைக் காத்த கடவுளைப்பொங்
கரியானைக் காவி னுறைவானைக் காசினிக் கண்ணைவைக்
கரியானைச் சோண கிரியானைத் தீயவர் கன்மம்பரி [குங்
கரியானைப் போற்றுதி நாவே யுனக்குக் கடனிதுவே.

வீடு தடாகம் விசிகந் திருநீறு
பீடுவரி யீதின் பொர்நடுவிற்-கூடு
மெழுத்துக்க ளைந்து மிசைத்துப் படிக்கச்
செழித்த வெமதூர் தெளி.

பெரியதனம் பின்பிறந்தோன் பெருமை மூன்றின்
பெயரிடையக் கரமெனக்கு நல்கி மற்றை
புரியபணி ரண்டெழுத்துந் தானே கொண்டா
னுடலமிசை யாபரண.மாகக் கொண்டான்
அரியதிரு வடிபணியார்க் காகிநின்றான்
அழி[illegible]கல்லாகி யமையக்கொண்டான்
[illegible]புய[illegible] [illegible]ன்றால் விபுதர் தம்மால்
கழுறாத சோண[illegible]ரையெம்மானே.

ஆதியெழுத் தின்[illegible]ஞ்சாக்கைக் கூறுவது
வோதுநடு வின்றே[illegible]ர்வானிற்-போதுவது
மீதியெழுத்தின்றேல் வி[illegible]ன்புலவர் பாடுவது
யாதுமிரு கத்தின்[illegible].

எடுத்த முதலெழுத் [illegible]ன்றே லெருதுக் கிடுங்கயிறு
அடுத்த நடுவெழுத் தின்றேற் சனியனுக் கானபெயர்
தொடுத்த கடையெழுத் தின்றே லொருமலர் தொல்கட
யுடுத்தபுவியிற்புலவீரிஃ திற்றென் றுரைக்குதிரோ. [லே

பிழை திருத்தம்.

குறிப்பு:—5-ம் பக்கம், 7-வது பாடலினுரையில், 3-வது வரியில் 'அவனை' என்பதற்குப் பதிலாக 'அவளை' என்றாலும் பொருளிழுக்காகாது. 8-ம் பக்கம் 5-வது வரியில் 'நியாதாலே' என்பதில் குற்றிய லிகரந் தள்ளி நேர்மையாக் கொள்க.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
13	14	தேணளிக்க	தேனளிக்க
21	10	களவ	களவு
29	3	நரகங்களே	நரகங்களேழு
30	17	வேண்டியது	வேண்டியவு
31	20	நரய	நாய
32	9	தீயா	தீயா
33	27	செக்சி	செக்கி
35	4	இசசெ	இச்செ
37	10	கோபம் புரிவது	கோபம் புரிவது போர்

Доп
10-94